

MR. N. H. M. ABDUL CADER,
**NEW M.M.C.**

கனம். என். எச். எம். அப்துல் காதிறு,
புதிய நகரசங்க அங்கத்தவர்.

C. A. C. PRESS.

# முஸ்லிம் பாதுகாவலன்.

## THE "MUSLIM GUARDIAN."

புத்தகம் 6.] கார்த்திகை, 1907. [இலக்கம் 9.

Vol. 6.] NOVEMBER, 1907. [No. 9.


## Notes by the Editor.

**The New M. M. C., Colombo.** We reproduce in our present issue the portrait of Mr. N. H. M. Abdul Cader, the new member of the Municipal Council, Colombo, for the Pettah Ward. We referred to his election in our last issue, and have now only to add that we hope that Mr. Abdul Cader will, while protecting the interests of his constituents in Municipal affairs, take interest in public matters as well, pertaining to the community to which he belongs, and co-operate with his friends who work for the amelioration of his co-religionists. It gives us pleasure to state that he has already begun to show his sympathy with the cause of his community by becoming a member of the Colombo Muslim Educational Society.

**The Beating of Tom-tom.** Nothing gives us more pleasure than to see the Mohammedans living peacefully with the members of the other communities dwelling in this Island. For considerable period there has been perfect peace between the Buddhists and the Mohammedans, save and except the commotions which occurred at Galle and Gampola, owing to the unsettled nature of the question of the beating of tom-tom near the public places of worship. Except this vexatious question there is nothing that we could see which tends to disturb the harmonious relation which ought but to exist everywhere between those two communities whose relation to each other is very cordial in some parts of the Island. Hence we feel it our duty, not only in the interest of the community which we represent, but in the interest also of every other community living in Ceylon to call upon the authorities to decide the question in a definite manner by enacting a rule with reference to the beating of tom-tom near the public places of worship. If such a rule is already in existence it must be published all over the Island, in the vernacular languages, and the people warned to respect it by observance and not by violation. In case after such publication any violation of the rule happens the person or persons responsible for it should be made to suffer an examplary punishment, if the authorities have the desire of making their laws respected and of making perfect tranquility to prevail among the different communities of the Island.

# An Address on Islam.

*Continued from the last issue.*

Having thus briefly stated some of the most important events in the life of Mohammed (on whom be everlasting peace) I shall now proceed to lay before you as concisely as I can the tenets of the religion taught by him. I may remark, by way of introduction, in the words of George Sale, the translator of the Holy Koran, "that the fundamental position on which Mohammed erected the superstructure of his religion was that from the beginning to the end of the world there has been, and for ever will be, but one true orthodox belief; consisting, as to matter of faith, in the acknowledging of the only true God, and the believing in and obeying such messengers or prophets as he should from time to time send, with proper credentials, to reveal his will to mankind; and as to matter of practice, in the observance of the immutable and eternal laws of right and wrong, together with such other precepts and ceremonies as God should think fit to order for the time being according to the different dispensations in different ages of the world: for these last, he allowed, were things indifferent in their own nature, and became obligatory by God's positive precept only; and were therefore temporary and subject to alteration according to his will and pleasure. And to this religion he gives the name of Islam, which word signifies resignation or submission to service or commands of God; and is used as the proper name of the Mohammedan religion, which they will also have to be the same at bottom with that of all the prophets from Adam."

The Mohammedan religion or the religion of Islam is divided into two distinct parts: namely Iman or faith, and Deen or practice. It is built on five fundamental points, one belonging to faith and the other four to practice. The first point is the confession of faith (Kalima) that "there is no God but the true God: and that Mohammed is the Apostle of God." Under this six distinct branches are comprehended. 1 Belief in God. 2 Belief in his angels; 3 Belief in his scriptures; 4 Belief in his prophets; 5 Belief in the resurrection and day of judgment; and 6. Belief in God's absolute decree and predetermination both of good and evil. The four points relating to practice are: 1 Prayer; 2. Alms; 3. Fasting; and 4. The pilgrimage to Mecca. I shall explain the above points separately.

The God of Mohammed in whmo the Mohammedans believe is described in the Koran thus; "God, there is no God but He, the living, the eternal. No slumber seizeth Him. Whatever is in heaven or in earth is His. Who can intercede with Him but by His own permission? He knows what has been before, and what shall be after them; yet nought of His knowledge shall they grasp but He willeth. His throne reacheth over the heavens and the earth, and the upholding of them both burdeneth Him not. He throweth the veil of night over the day, pursuing it quickly. He created the sun, moon, and stars subjected to laws by behest. Is not all creation and all empire His.? Blessed be the Lord of the worlds. Say, He alone is God. God the eternal. He begetteth not, and He is not begotten; there is none like unto Him. Praise be to God, the Lord of the worlds, the Compassionate, the Merciful, King on the day of reckoning. Thee only do we worship, and to thee do we cry for help. Guide us on the straight path—the path of those to whom thou art gracious, with whom thou art not angry; such as go not astray. There is God for you, your Lord. There is no God but He, the creator of everything; then worship Him, for He over everything keeps guard. Sight perceives Him not, but He perceives mens' sights for He is the All-penetarting, the Aware. Say verily my prayers, and my devotion,

and my life, and my death, belong to God, the Lord of the worlds. Dost thou not perceive that all creatures both in heaven and earth praise God; and the birds also? Everyone knoweth His Prayer and His Praise. Unto God belongeth the kingdom of heaven and earth; and unto God shall be the return. Shall I seek any other Lord than God, when He is Lord of all things. No soul shall labour but for itself, and no burdened one shall bear another's burden. Is not He the more worthy who answereth the oppressed when they cry to Him, and taketh off their evils, and maketh you to succeed your sires on the earth? God the Almighty, the All-knowing, Forgiver of sin, and Receiver of penitence".

The Mohammedans believe in the existence of angels and in their purity. They have no sex, but have pure and subtle bodies; they neither eat, nor drink, nor propagate their species; and they have various forms and offices. Some adore God, and others sing praises to Him. Some execute his orders, and others intercede for mankind. The four eminent among them are Gabriel, Michail, Azrail and Israfil.

We are bound to believe that God in divers ages of the world, gave revelations of his will to several prophets. The number of these sacred books was 104, of which ten were given to Adam, fifty to Seth, thirty to Edris, ten to Abraham; and the other four, being the Pentateuch thePsalms, the Gospels, and the Koran, were successively delivered to Moses, David, Jesus, and Mohammed. We believe Mohammed to be the last and the seal of the prophets whose revelations are now closed, and no more are to be expected. Without any controversial inclination I may be permitted to state that the Muslims are taught to believe that it was to point out the corrup tions which had crept into the previous scriptures that the Koran was revealed.

The prophets who have been sent from time to time by God into the world to preach his religion, number, according to a tradition, 124,000, among whom 313 were apostles, sent with special commissions, some of them brought new laws or dispensations. These were Adam, Noah, Abraham, Moses, Jesus and Mohammed. All the prophets were free from all sins, and professed one and the same religion, that is Islam. Some of them are more excellent than others. The first place is given to those who have brought new dispensations and the next to the apostles. I shall state here that the Muslims differ from the Christians in regarding Jesus as only one of the four great prophets.

The next article of the Mohammedan faith is the belief in resurrection and future judgment. With the death of a man his soul enters into that state which is called al-Berzakh, or the interval state between the death and the resurrection. On the day of resurrection he will arise, if he be destined to partake of eternal happiness, in honour and security; if he be doomed to misery, in disgrace and under dismal apprehensions. He shall then give an account of his actions to God, and receive the rewards there of. The state after life is not altogether a new state, but a continuation of the present one. The future state is a representation, a full and clear image of our spiritual state in the present life. In this connection I have to point out that some ignorant writers have stated that in Islam women have no souls, and shall perish like brute beasts. It is quite wrong. According to the teachings of Mohammed the man as well as the woman will have future happiness or punishment in consequence of his or her good or bad actions.

The sixth great point of faith in Islam is God's absolute decree and predestination both of good and evil. The orthodox doctrine is that

whatever has or shall come to pass in this world, whether it be good or bad, proceeded entirely from the will of God.

The first of four fundamental points of religious practice required by the Koran is prayer. Before entering upon prayer the Muslims perform the ordinary ablution called *wadu* which is the washing of their faces, hands, and feet after a certain manner. In extraordinary cases they wash their whole bodies. The practice of religion is founded on cleanliness, which is considered to be one-half of the faith and the key of prayer. Imam Ghazzali, the famous Muslim theologian, reckons four degrees of purification. The first is the cleansing of the body from all pollution, filth and excrements; the second the cleansing of the members of the body from all wickedness and unjust actions; the third the cleansing of the heart from all blamable inclination, and odious vices; and the fourth the purifying of a man's secret thoughts from all affections which may divert their attendance on God. Mohammed used to call prayer the pillar of religion and the key of paradise. When the people of Thayif, on their embracing the creed of Islam, begged that they might be permitted to dispense with prayer, Mohammed declared that there could be no good in that religion wherein there is no prayer. The Mohammedans are to pray five times every twenty four hours at certain stated times, namely. 1. In the morning before sun rise, 2. when noon is past, and the sun begins to decline from the meridian, 3 In the afternoon before sunset; 4. In the evening after sunset and before day be shut in; and 5. After the day be shut in, and before the first watch of the night. The observing of the stated times of prayer is frequently insisted on in the Koran.

The next point of our religious practice is the giving of alms. The legal alms consist of two and half per cent or one-fourth of the substance possessed, and they are due when the substance amounts to a certain quantity prescribed by the law. The giving of alms is considerde by the Mohammedans to be highly meritorious. Khalif Omer Ebn Abdul Azeez used to say that "prayer carries us half way to God, fasting brings us to the door of his palace, and alms procure us admission."

The third point of the religious practice is fasting. The Mohammedans are obliged to fast the whole month of Ramadhan during which time they must abstain from eating, drinking, and women, from daybreak till sunset. Mohammed used to say that "fasting was the gate of heaven," and that the odour of the mouth of him who fasteth is more grateful to God than that of musk. Imam Ghazzali reckons fasting one-fourth part of the faith. According to the Mohammedan divines there are three degrees of fasting: 1. The restraining the belly and other parts of the body from satisfying their lusts. 2. The restraining the ears, eyes, tongue, hands, feet, and other members from sin: and 3. The fasting of the heart from worldly cares, and refraining the thoughts from everything besides God.

The fourth point is pilgrimage to Mecca. To the temple at Mecca every *Muslim, male or female, who has* health and means sufficient ought once at least in his or her life to go on pilgrimage. The chief ceremonies which form the rite of pilgrimage consist in the wearing of the Ihram or sacred garb, in going in procession round the Caaba, in running between the mounts of Safa and Merwa, in tarrying on mount Arafat in throwing stones in imitation of Abraham, in slaying the victims such as sheep, goat, kine, or camel, and in shaving the heads.

What I have stated are the positive precepts of the Koran in respect of faith and practice. I shall now

state a few words about the Koran *itself*, its *negative precepts*, and the civil law of the Mohammedans.

The Koran is the sacred book of the Mohammedans. It contains the revelations from God to Mohammed the apostle of God and is divided into 114 chapters. Its language is, as universally admitted, most elegant and pure, and it is confessedly the standard of the Arabic tongue. Its style is beautiful and fluent. Its great doctrine is the unity of God. It prohibits the drinking of wine under which name all sorts of strong and inebriating liquors are comprehended. Gaming, the eating of blood, and swine's flesh or whatever dies of itself or not slain in the name of God are prohibited by the Koran. It put a stop to the inhuman custom which the pagan Arabs had practised, of burying their daughters alive. The civil law of the Mohammedans is founded on the precepts of the Koran and the traditions of the Prophet. The four great expounders of it are Abu Hanifa, Malec, al *Shafei*, and *Ebn Hambal*. Polygamy is allowed with certain limitation. So is divorce; a man can repudiate his wife on the slightest disgust, but a woman cannot separate herself from her husband unless for the reasons prescribed by the law. Adultery is to be punished severely. The Muslims are *prohibited from marrying* within certain degress. Protection is given to women and orphans, who had been treated with great injustice by the pagan Arabs. The Mohammedans have their own law of inheritance, the general rule (with few exceptions) to be observed in the distribution of the deceased's estate being that a male shall have twice as much as a female. Murder and theft are forbidden under severe penalties. The Mohammedan law provides penalties for injuries and crimes of inferior nature too.

The Mohammedans are divided into several sects, the most important of which are the Sonni and Shiah. The *Sonnites acknowledge* the authority of Sonna, or the collection of the sayings of the Prophet, whereas the shiites reject it. These sects differ from one another not on the fundamental points of faith and practice mentioned by me, but on minor points.

I have now given the outline of *the Mohammedan religion to* know which you aspired, but whoever desires to know it in detail will have to study standard works on it. This address will not be complete without few testimonies, offered spontaneously by non-Mohammedans, to the importance of Mahammed, the moral degradation in which he found his people, the spiritual elevation to which they have been raised by the moralising influence and magnatic power of his teaching, and the merits of Islam. Therefore I quote here the statements of a few eminent men.

Carlyle says of Mohammed: "A silent great soul, he was one of *those who cannot but be earnest*, whom nature herself has appointed to be sincere. While others walk in formulas and hearsays, contented enough to dwell therein, this man could not screen himself in formulas, he was alone with his whole soul and the reality of things. The great mystery of existence glared in upon him with its terrors, with its splendours; no hearsays could hide that unspeakable fact: 'Here am I.' Such sincerity, as we named it, has in truth something of the divine. The word of such a man is a voice direct from natures own heart. Men do and must listen to that or to nothing else; all else is wind in comparison. From of old a thousand thoughts in his pilgrimage and wanderings had been in this man. 'What am I? What is this unfathomable thing I live in, which men name *universe?* What is life! What is death? What am I to belive? What am I to do?' The

grim rocks of mount Hira, of mount Sinai, the stern sandy solitude answered not. The great heaven rolling silently overhead with its bright glancing stars, answered not. There was no answer. The man's own soul and what of God's inspiration dwelt there had to answer."

Sir William Muir says: "From time beyond memory Mecca and the whole Peninsula had been steeped in spiritual torpor. The slight and transient influences of Judaism and Christianity or philosophical inquiry upon the Arab mind had been but as the ruffling here and there of the surface of a quite lake; all remain still and motionless below. The people were sunk in superstition, cruelty and vice. It was a common practice for the eldest son to take to wife his father's widows, inherited as property with the rest of the estate. Pride and poverty had introduced among them (as they have among he Hindus) the crime of female infanticide. Their religion wae a gross idolatry, and their faith rather the dark superstitious dread of unseen beings, whose good will they sought to propitiate, and whose displeasure to avert, than the belief in an overruling Providence. The life to come and the retribution of good and evil were, as motives of actions, practically unknown. Thirteen years before the Higera Mecca lay lifeless in this debased state. What a change had those thirteen years now produced. A band of several hundred persons had rejected idolatry, adopted the worship of one God and surrendered themselves implicitly to the guidance of what they belived as revelation from Him, praying to the Almighty with frequency and fervour, looking for pardon to His mercy, and striving to follow after good works, almsgiving, chastity, and justice. They now lived under a constant sense of the omnipotent power of God, and of His providential care over the minutest of their concerns. In all the gifts of nature. in every relation of life, at each turn of their affairs, individual or public, they saw His hand. And above all the new existence in which they exulted was regarded as the mark of special grace, while the unbelief of their blinded fellow citizens was the hardening stamp of reprobation. Mohammed was the minister of life to them, the source under God of their new born hopes, and to him they yielded an implicit submission."

John Davenport says: "Islam . . . the religion thus established by the Koran is a stern and severe Monotheism; it has nothing abstract and indistinct in its primary notion of the Godhead. Allah so far from being a mere philosophical first cause regulating the universe by established laws while itself stands aloof in unapproachable majesty, is an ever present, ever working energy, It is a religion, moreover, stripped of all controversy, and which, proposing no mystery to offer violence to reason, restricts the imagination of men to the being satisfied with a plain, invariable worship, notwithstanding the fiery passions and blind zeal that so often transported them beyond themselves. Lastly it is a religion from which all worship of saints and martyrs, relics and images, all mystery and metaphysical subtlety, all monastic seclusion and enthusiastic penance is banished; and which bears internal proofs of having been the result of long and deep meditation upon the state and condition of the nations of the world of that time, and upon the reconcilement of the objects of religion with those of reason."

## இஸ்லா மார்க்கத்தைப் பற்றிய பிரசங்கம்

—:o:—

(தொடர்ச்சி)

முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் சீவிய சரித்திரத்திலுள்ள சில பிரதான காரியங்களைத் தெரிவித்துவிட்டு, அவர்கள் போதித்த மார்க்கத்தின் கோட்பாடுகளை யென்னாலேன்றிய அளவு சுருக்கமாய் உங்களுக்குத் தெரிவித்தற்கு யான் இப்பொழுது துணிகின்றேன். பரிசுத்த குறு ஆனை மொழிபெயர்த்த ஜோர்ஜ் ஸேல் என்பவரின் வார்த்தைகளை யான் ஆரம்பத்திற் றருகின்றேன். அவர் சொல்லுகின்றார்:— "முகம்மது தமது மார்க்கத்தின் சட்டத்தை யமைத்த அஸ்திவாரமாகிறது உலகத்தின் துவக்கமுதல் கடைசிவரையில் ஒரே யுண்மையான மார்க்கம் இருந்ததென்பதும் இருக்குமென்பதுமே. அம்மார்க்கத்தின் விசுவாசம் ஒரே உண்மையான கடவுளை யொப்புக்கொள்வதிலும், அவனால் அவனின் சித்தத்தை மனிதர்களுக்கு வெளிப்படுத்தற்குக் காலத்துக்குக் காலம் அனுப்பப்படுகிற தீர்க்கதரிசிகளை யல்லது தூதர்களை விசுவாசித்து அவர்களுக்குக் கீழ்ப்படிவதிலும் அமைந்திருக்கின்றது. மேலும் அம்மார்க்கம் செய்கையில் நன்மை தீமைகளைப் பற்றிய மாறுதசட்டங்களையும் பல காலங்களில் பல மார்க்கங்களில் அல்லாகுத்தஆலா கட்டளையிட்ட கோட்பாடுகளையும் கர்மங்களையும் ஒப்புக்கொள்வதிலும் அமைந்திருக்கின்றது. மேற்படி கர்மங்கள் தம்மில் உபேக்ஷையானவை. அல்லாவின் கட்டளையால் கடமைப்படுத்தப் பட்டவை. ஆதலால் அவை அநித்தியமானவைகளாயும் அல்லாவின் சித்தப்படியும் விருப்பப்படியும் மாற்றப்படக்கூடியவைகளாயும் இருக்கின்றன. இம்மார்க்கத்துக்கு இஸ்லாம் என்றபெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இச்சொல்லின் அர்த்தம் தம்மைத்தாமே அல்லாவுக்கு ஒப்புக்கொடுத்தல் என்றது. அல்லது அவனின் சேவகத்திற்கும் கட்டளைக்கும் கீழ்ப்படிதல் என்றது. இதுவே முகம்மதிய மார்க்கத்தின் சரியானபெயர். மேலும் அந்தமார்க்கமும் ஆதம் முதல் சர்வ தீர்க்கதரிசிகள் கொண்டுவந்த மார்க்கங்களு மொன்றே யென்று அவர்கள் (முகம்மதியர்கள்) சொல்லுகிறார்கள்" என்றே.

முகம்மதிய்ய மார்க்கம் அல்லது இஸ்லாமார்க்கம் இருபாகங்களாய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவையாவன:— ஈமான் அல்லது விசுவாசமும் தீன் அல்லது கிரியையுமே. அம்மார்க்கம் ஐந்து மூலாதாரமான காரியங்கள் மீது அமைக்கப் பட்டிருக்கின்றது. அக்காரியங்களுள் ஒன்று விசுவாசத்தைச் சேர்ந்தது. மற்றும் நான்கும் கிரியையைச்சேர்ந்தது. முதலாவது காரியம் விசுவாசத்தை வெளிப்படுத்தல். அதாவது அல்லாவைத்தவிர வேறு நாயனில்லையென்றும் முகம்மதாகிறவர்கள் அல்லாவுடைய தூதரென்றும் கலிமாச் சொல்லுதல். இவ்விசுவாசத்தில் ஆறு பிரிவுகளிருக்கின்றன. 1-வது. அல்லாவில் விசுவாசங்கொள்வது. 2-வது. அவனின் மலக்குகளில் விசுவாசங் கொள்வது. 3-வது அவனின் வேதங்களில் விசுவாசங் கொள்வது. 4-வது. அவனின் தீர்க்கதரிசிகளில் விசுவாசங் கொள்வது. 5-வது திரும்ப எழுப்பப்படுவதிலும் நியாயத்தீர்ப்புடையநாளிலும் விசு

வாசங் கொள்வது. 6-வது, நன்மையையும் தின்மையையும் குறித்து அல்லாவின் முன்னியமத்தில் விசுவாசங்கொள்வது. கிரியையைப்பற்றிய நான்கு காரியங்களுமாவன:— 1-வது. தொழுகை, 2-வது தருமம், (ஸக்காத்து) 3-வது நோன்பு, 4-வது ஹஜ்ஜி.

மேற்படி காரியங்களை வெவ்வேருய்ச் சொல்கின்றேன்.

முகம்மதியர்கள் விசுவாசிக்கிற முகம்மதுநபியின் நாயன் குறுஆனில் இவ்வாறு விவரிக்கப்பட்டிருக்கின்றுன்:— "அல்லா, அவனைத்தவிர வேறுநாயனில்லை. ஜீவனேடிருப்பவன், நித்தியமானவன். அவனைத் தூக்கம் தொடவில்லை. வானத்திலும் பூமியிலுமுள்ள எதுவும் அவனுடையதே. அவனுடைய வுத்தரவோடையேயன்றி அவனேடு ஆரால்பரிந்து பேசலாம். அவர்களுக்கு முன்னிருந்ததையும் பின்னிருப்பதையும் அவனறிவான். அவனுடைய அறிவிலிருந்து அவனுடையதைத் தவிர மற்றதையவர்கள் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். அவனுடைய கொலுவானத்துக்கும் பூமிக்கும் மேலே செல்லுகிறது. அவையிரண்டையும் தாபரிக்கிறது அவனுக்குச் சுமையன்று. அவன் இரவின்மூக்காட்டைப் பகல்மீது எறிகின்றுன். அவன் சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் ஆகியவற்றைப்படைத்து அவற்றைத் தன் கட்டளைப்படி சட்டங்களுக்குக் கீழ்ப்படுத்தினன். சர்வ சிருஷ்டியும் சர்வ விராச்சியமும் அவனுடையன வல்லவா? உலகங்களின் நாயன் துதிக்கப்படுவானக. சொல்லும் அவ்ன்மாத்திரமே நாயன், நித்தியமான அல்லா, அவன்மபறுவதுமில்லை, அவன் பெற்பபடவுமில்லை, அவனுக் கொப்பான தொன்றுமில்லையென்று. அல்லாவுக்கேபுகழ். உலகங்களின் நாயன். இரக்கமுள்ளவன், தயாபரன், நியாயத்தீர்ப்பின் நாளின் அரசன், உன்னையே நாங்கள் வணக்குகிறேம். உன்னிடத்தே உதவிதேடுகின்றேம். நேரானபாதையில் எங்களை வழிகாட்டு, நீ கருணைவைத்த நீ கோபங்கொள்ளாத வழிசறுகிப்போகாத பேர்களின் பாதையில். உங்கள்நாயனே உங்கள்அல்லாவா இருக்கின்றுன். அவனைத் தவிர வேறுநாயனில்லை. எல்லாவஸ்தையும் படைத்தவன். அவனை வணஙகுங்கள். அவன் எல்லாவஸ்தையும காக்கின்றவன். அவனைப் பார்வை காணுது. ஆகிலும மனிதாகளின் பாாவைகளையவன் காண்கின்றுன். அவன் எல்லாமூடுருவி யறிந்தவன். சொல்லும மெய்யாகவே எனது பிரார்த்தனைகளும் எனது வணக்கமும் எனது ஜீவனும எனது மரணமும் அல்லாவுக் குடையன, அவன் உலகங்களின நாயன் என்று. வானததிலும் பூமியிலு முள்ள சர்வ சிருஷ்டிகளும் பக்ஷிகளும் அல்லாவைத துதிப்பதை நீ காணவில்லையா? அவனின் வணக்கத்தையும் அவனின் புகழையும் ஒவ்வொன்றும் அறிந்திருக்கின்றது. வானத்தினதும் பூமியினதும் இராச்சியம் அல்லாவுக்குடையது. திரும்புதல் அல்லா இடத்திற்கே. அவன் எல்லாவஸ்தின் நாயனுயிருக்க அல்லா அல்லாத நாயனை யான் தேடலாமா? ஒரு ஜீவனுவது தனக்கேயன்றிப் பிரயாசப்படுவதில்லை. சுமை யுள்ளவொருவன் இன்னொருவனின் சுமையைச் சுமப்பதில்லை. துன்பப்படுபவர்கள் அவனை யழைத்த பொழுது அவர்களுக்கு உத்தாம் சொல்பவனும், அவர்களின் துன்பங்களை யகற்றிவிடுபவனும், உல

கத்தில் உங்களை உங்கள்பிதாக்களுக்குப்பின் வருபவர்களாக்குகின்றவனுமாகிய அவன் மெத்தவும் தகுதி யுள்ளவனல்லவா? சர்வவல்லமை யுள்ளவனும், சர்வஞான முள்ளவனும், பாவத்தை மன்னிக்கிறவனும், பச்சாத்தாபத்தை யேற்றுக்கொள்பவனுமாகிய அல்லா.”

முகம்மதியர்கள் தேவதூதர்களான மலக்குகளுண்டென்றும் அவர்கள் சுத்தமானவர்களென்றும் விசுவாசிக்கிறார்கள். அவர்களுக்கு வர்க்கம் இல்லை. ஆகிலும் அவர்களுக்குச் சுத்தமான நுண்மையான தேகங்களுண்டு. அவர்கள் தின்னுவதுமில்லை, குடிப்பதுமில்லை, தனது இனத்தைப் பரப்புவதுமில்லை. அவர்களுக்குப் பலகோலங்களும் பலதொழில்களு முண்டு. சிலா அல்லாவை வணங்குகின்றார்கள். மற்றவர்கள் அவனைப் புகழ்கின்றார்கள். சிலர் அவனின் கட்டளைகளை நிறைவேற்றுகின்றார்கள். மற்றவர்கள் மனிதர்களுக்காய்ப் பரிந்துபேசுகின்றார்கள். அவர்களுள் நான்கு பிரதானமானவர்கள் ஜிப்றீல், மீக்காயில, இஸ்றயில், இஸ்றபீல ஆகியவர்களே.

அல்லாகுத் தஆலா பலகாலங்களில் பல தீர்க்கதரிசிகளுக்கு (நபிமார்களுக்கு) அவனின் சித்தத்தைத் தெரியப்படுத்தினனென்று விசுவாசிக்க நாங்கள் கடமைப்பட்டவர்களா யிருக்கின்றோம. அவன் அந்நபிமார்களுக்குக் கொடுத்த வேத நூல்களின் தொகை 104. இவற்றுள் 10 ஆத மலைஹிஸ்ஸலா முக்கும், 50 சீது அலைஹிஸ்ஸலாமுக்கும், 30 இத்றீஸ் அலைஹிஸ்ஸலா முககும், 10 இபுறுஹீம் அலைஹிஸ்ஸலாமுக்கும் மற்றைய நான்குமான தவ்றாது, ஸபூர், இன்ஜீல், குர்ஆன் ஆகியவைகள் மூஸா அலைஹிஸ்ஸலாம், தாவூது அலைஹிஸ்ஸலாம், ஈஸா அலைஹிஸ்ஸலாம் முகம்மது சல்லல்லாகு அலைஹிவசல்லம் ஆகியவர்களுக்கும் கொடுக்கப்பட்டன. முகம்மது சல்லல்லாகு அலைஹிவசல்லம் அவர்கள் தீர்க்கதரிசிகளுள் கடைசியானவர்களென்றும் முத்திரையானவர்களென்றும் நாங்கள் விசுவாசிக்கின்றோம். இனிமேல் நபிமார்களுமில்லை வேதஙகளுமில்லை, குறுஆன் இறக்கப்பட்டது முந்தின வேதங்களி லுண்டுபட்ட தவறுகளைக் காட்டுதற்கே யென்று விசுவாசித்தற்கு முஸ்லிம்கள் கற்பிக்கப்பட்டிருககிறார்களென்பதை யான் தாக்க நோக்கமின்றிச் சொல்லுகின்றேன்.

காலத்துக்குக் காலம் அல்லாகுத்தஆலாவால் உலகத்துக்குத் தனது மாாக்கத்தைப் போதித்தற்காய் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளின் தொகை 124,000. அவர்களுள் 313 பேர்கள் விசேஷகட்டளைகளோடு அநுப்பப்பட்ட றசூல்மார்கள். இவாகளுள் ஆறு பேர்கள் புதுச் சட்டங்கள் கொண்டுவந்தவர்கள். அவர்களாகிறவர்கள்:— ஆதமு, நூஹ், இபுறுகீம், மூஸா, ஈஸா, முகமமது ஆகியவாகளே. எல்லா நபிமார்களும் பாவங்களைவிட்டும் நீங்கியவர்கள். எல்லாரும் ஒரே மார்க்கத்தை யனுசரித்தவர்கள். அதாவது இஸ்லாம். அவர்களுட் சிலர் மற்றவர்களைப் பார்க்கிலும் சிறப்பானவர்கள். முதலாமிடம் புது வேதங்கள் கொண்டுவந்தவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது, அடுத்தவிடம் றசூல்மார்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. ஈஸா அலைஹிஸ்ஸலாத்தை நான்கு பெரிய தீர்க்கதரிசிகளு ளொருவராய் முஸ்லிம்க ளொப்புக் கொண்டிருக்கிறார்களென்றும் இதில் அவர்கள்

கிறிஸ்தவர்களை விட்டும் வித்தியாசப்படுகிறார்களென்றும் யான் இங்கு சொல்லுகின்றேன்.

முஹம்மதியர்களின் விசுவாசத்திலுள்ள அடுத்தகாரியம் உயிர்த்தெழும்புவதிலும் நியாயத்தீர்ப்பிலும் விசுவாசிப்பது. ஒரு மனிதனின் மரணத்தோடு அவனின் ஆத்மா பர்ஸகு என்றழைக்கப்படுகிற வேர் தன்மையிலாகின்றது. அதாவது மரணத்துக்கும் உயிர்த்தெழும்புவதுக்கும் இடையிலுள்ள காலம். உயிர்த்தெழும்பும் நாளில் அவன் நித்திய வாநந்த மடையவிருக்கில் கனத்தோடும் பாதுகாப்போடும் எழும்புவான். அவன் துன்பத்தை யனுபவித்தற்குத் தீர்மானிக்கபபட்டிருந்தால் இழிவோடும் அசசத்தோடும் எழும்புவான்; அப்பொழுது அவன் தனது செய்கைகளின் கணக்கைத் தன்னுடைய நாயனுக்குக் கொடுத்து அவற்றின் பலனைப் பெற்றுக்கொள்வான். இஸ்லாம் மார்க்க ஞானப்படி மரணத்துக்குப் பிறகுவரும் சீவியம் முற்றாய்ப் புதிதானதல்ல. வரும் சீவியம் இந்தச் சீவியத்தின் ஓர் தொடர்ச்சியே. இந்தச சீவியத்திலுள்ள எங்கள் ஆத்மாவின் தன்மையின் தெளிவான பிரதிரூபமே. சில நூலாசிரியர்கள் அறியாமையால் இஸ்லாத்தில் பெண்களுக்கு ஆத்மா இல்லையென்றும் மிருகங்களைப்போல இறப்பார்களென்றும் கூறியிருப்பதை யான் இங்கு எடுத்துக்காட்டுகின்றேன். இது முற்றாய்ப்பிழை. முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் மார்க்கப்படி மனிதனும் ஸ்திரியும் தனது நற்செய்கையல்லது துற்செய்கைப்படி வருங்காலத்தில் இன்பத்தை அல்லது துன்பத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

இஸ்லாமில் விசுவாசத்தின் ஆறுவது காரியம் அல்லாகுத்தஆலா நன்மையையும் தின்மையையும் முன்னியமித்துத் தீர்மானித்திருக்கின்றானென்று விசுவாசிக்கிறது. வேதநூல் முறையான கொள்கையாகிறது இவ்வுலகத்தில் யாது சம்பவித்தாலும், அது நன்மையாயிருப்பினும் தீமையாயிருப்பினும், அல்லாகுத்தஆலாவின் சித்தப்படியாயிருக்கிறதென்பதே.

குறுஆன்கற்பிக்கிற வேதக்கிரியையின் நான்கு மூல காரியங்களுள் முதலாவதானது தொழுகை. தொழுகையிலாகமுன் ஒளு என்னும ஸ்நாநத்தைச் செய்கின்றார்கள். அது கை, முகம், கால், முதலிய உறுப்புகளை யொரு வொழுங்காய்க் கழுவுகிறதே. விசேஷமான தருணங்களில் அவர்கள் குளித்துத் தேகமுழுதையும கழுவுவார்கள். வேதக்கிரியை சுத்தத்தில் தங்கி இருக்கின்றது. சுத்தம் வேதத்தில் பாதியென்றும் தொழுகையின் திறவுகோலென்றும் எண்ணப்படுகிறது. கீர்த்திபெற்ற முஸ்லிம் வேதசாஸ்திரியான இமாம கஸ்ஸாலி அவர்கள் சுத்தத்தை நான்கு பாகங்களாய்க் காட்டியிருக்கின்றார்கள். முதலாவது எல்லா ஆசூசங்களையும், அழுக்கையும், நரகல்களையும் விட்டுத் தேகத்தைச் சுத்தப்படுத்துதல். இரண்டாவது எல்லாக்கெடுதிகளையும் அநீதியான செய்கைகளையும விட்டுத் தேகவுறுப்புகளைச் சுததப்படுத்துதல். மூன்றாவது குறறமுள்ள எண்ணங்களையும் அருவருப்பான பாவங்களையும் விட்டு இருதயத்தைச் சுத்தப் படுத்துதல். நான்காவது மனிதனின் அந்தரங்கமான எண்ணங்களை நாயனைவிட்டும் திருப்புகிற விருப்பங்களை விட்டும் அவ்வெண்ணங்களைச் சு

த்தப்படுத்துகிறது. தொழுகை மார்க்கத்தின் தூண் என்றும் சுவர்க்கத்தின் திறவுகோல் என்றும் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் கூறியிருக்கின்றார்கள். தாயிபி லுள்ள ஜனங்கள் இஸ்லா மார்க்கத்தை யனுசரித்தபொழுது தொழாதிருத்தற்கு விடங்கேட்டதற்கு தொழுகையில்லாத மார்க்கத்தில் பலனில்லை யென்று முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் கூறினார்கள். முகம்மதியர்கள் இருபத்து நான்கு மணித்தியாலத்தில் ஐந்து முறை குறிக்கப்பட்ட நேரங்களில் தொழவேண்டும். அவையாவன:— 1 வது சூரியோதயத்தின் முன்னுள்ள காலை. 2 வது, பகல், சூரியன் உச்சியிலிருந்து இறங்கத்துவங்கும்பொழுது. 3 வது, பிற்பகல் சூரிய அஸ்தமனத்துக்குமுன். 4 வது, மாலை, சூரிய அஸ்தமனத்திற்குப் பின்னும இரவாகுமுன்னும. 5 வது, இரவு பொழுதுவிடிய முன். குறிக்கப்பட்ட நேரங்களில் தொழுகிறது குறுஆனில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

எங்கள் வேத கிரியையிலுள்ள அடுத்த காரியம் தருமம் (ஸகாது) கொடுப்பது. நியாயப்படியுள்ள தருமம் உள்ளசொத்தில நூற்றுக்கிரண்டரை அல்லது நாற்பதிலொன்று. மார்க்கத்திற் சொல்லப்பட்ட அளவுக்குச் சொத்துண்டானவுடன் ஸகாத்துக்கொடுப்பது விதியாகும். ஸகாத்துக் கொடுப்பது மிக்கப்பிரயோசனமான காரியமாய் முஸ்லிம்களால் எண்ணப்படுகின்றது. கலீபு உமறு இபுனு அப்துல் அஸீஸ் அவர்கள் "தொழுகையெங்களை அல்லாவிடம் அரைவாசித்தூரம் கொண்டுபோகிறது, நோன்பு அவனின் மாளிகை வாயிலுக்கு எங்களைக் கொண்டுவருகிறது, தருமம் (ஸகாத்து) நாங்கள் உள்ளே செல்லப் பண்ணுகிறது" என்று கூறியிருக்கின்றார்கள்.

வேத கிரியையின் மூன்றாவது காரியம் நோன்பு. றமழான் மாதம்முழுதும் நோன்பு பிடிப்பது முகம்மதியர்களுக்குக் கடமை. அந்தக்காலத்தில் அவர்கள் விடியற்கால முதல் சூரியனஸ்தமிக்கும் வரையில் தீனையும் குடிப்பையும் பெண்களையும் தவிர்ந்து கொள்ளல்வேண்டும். நோன்பு சுவர்க்கத்தின் வாயிலென்றும் நோன்பு பிடிப்பவனின் வாயின்வாசனை கஸ்தூரியின் வாசனையைப்பார்க்கிலும் அல்லாவுக்குப் பிரியமுள்ளதென்றும் முகமமது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் பகர்ந்திருக்கின்றார்கள். நோன்பு வேதத்தில் நாலிலொரு பங்கென்று இமாம் கஸ்ஸாலி கூறியிருக்கின்றார்கள். முகம்மதிய வேதசாஸ்திரிகள் நோன்பை மூன்று பாகங்களாய்ப் பிரித்திருக்கின்றார்கள். 1 வது, வயிற்றையும சரீரத்தின் வேறு பாகங்களையும் அவற்றின் இச்சைகளை நிறைவேற்றிக் கொள்ள விடாது தடுத்துக்கொள்வது. 2 வது செவி, கண், நாவு, கை, கால் முதலிய உறுப்புகளைப பாவங்களைவிட்டும், தடுத்துக்கொள்வது. 3 வது கல்பு உலக்கவலைகளைவிட்டும நோன்பாயிருப்பதும் அல்லாகுத்தஆலா அல்லாத வஸ்துக்களை விட்டும் எண்ணத்தை விலக்கிக்கொள்வதுமே.

நான்காவது காரியம் மக்காவுக்குச் சென்று ஹஜ்ஜி செய்வது. போதிய சுகமும் பொருளுமுள்ள ஒவ்வொரு முஸ்லிமான ஆணும்பெண்ணும்குறைந்தது ஆயுளில் ஒருதரம் மக்காவுக்கு ஹஜ்ஜிக்காய்ச் செல்வது ஆவசியகம், ஹஜ்ஜின் சடங்கிலுள்ள பிரதான கிரி

யைகள் இஹ்றாம் என்னும் பரிசுத்தவுடை யணிவதும், கஃபாவைச் சுற்றித் தவாபுசெய்வதும், ஸபா மர்வ என்ற இரு மலைகளுக்கும் இடையில் ஓடுவதும், அறபாத்து மலையில் தங்குவதும், இபுறாஹீம் நபியைத் தொடர்ந்து கல்லெறிவதும், ஆடு ஒட்டகை முதலிய மிருகங்களைப் பலிகொடுப்பதும், தலையைச் சௌரம்பண்ணுவதுமே.

நானிதுகாறும் இஸ்லாம் மார்க்கம் பிரிக்கப்பட்டிருக்கிற விசுவாசம் கிரியை ஆகிய இரு பாகங்களைக் குறித்து குறுஆன் கற்பிக்கிற உறுதியான கற்பனைகளைச்சொன்னேன். நான் இப்பொழுது குறுஆனைப்பற்றியும் அதன் மறுப்பான கற்பனைகளைக் குறித்தும் முகம்மதியர்களின் ஸிவில சட்டத்தைக்குறித்தும் சில வார்த்தைகளைச் சொல்ல நாடுகின்றேன்.

குறுஆனே முஸ்லிம்களின் பரிசுத்த நூல். அதில் அல்லாகுத்தஆலாவிட மிருந்து அவனுடைய றசூலாகிய முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுக்கு வந்த வேத அறிவிப்புகள் அமைந்திருக்கின்றன. அது 114 அதிகாரங்களாய்ப் பிரிககப்பட்டிருக்கின்றது. குறுஆனின் பாஷை சுத்தமானதென்றும் அலங்காரமானதென்றும் லோகப் பிரசித்தமாய் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. மேலும் அதுவே அறபுப் பாஷையின் திடடமென்று ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதன் போக்கு அழகானதும் ஒட்டமானதுமே. அதன் பெரும் கற்பனையாகிறது அல்லாகுத்தஆலா ஒருவன் என்றதே. குறுஆன் மதுபானம் குடிப்பதை விலக்குகின்றது. அந்த நிஷேதத்தில் வெறியுள்ள சர்வகுடிப்புகளும் அடங்குகின்றன. சூதாட்டமும், இரத்தம், கின்ஸீர் மாமிசம் ஆகியவைகளையும், தானாய் இறக்கின்ற அல்லது அல்லாகுத்தஆலாவின் நாமத்தைக் கொண்டறுக்கப்படாத எதையும் தின்பதை குர்ஆன் விலக்குகின்றது. அஞ்ஞானிகளான அறபிகள் தங்களின் பெண்மக்களை உயிரோடு புதைக்கின்ற குரூரமான வழக்கத்தை குறுஆன் தடுத்து விட்டது. முகம்மதியர்களின் நியாயப் பிரமாணத்திற்கு (பிகிஹ்) குறுஆனின் கற்பனைகளும் நபியின் ஹதீதுகளுமே அஸதிவாரமா யிருக்கின்றன. அச்சட்டத்தை வியாக்கியானம பண்ணியவர்களுள் பிரதானமான நான்கு இமாம்களாகிறவர்கள் அபூஹனீபா, மாலிக்கு, அஷ்ஷாபீ, இபுனு ஹம்பல் ஆகியவர்களே. பலபெண் விவாகம சில எல்லைமானங்களோடு இடங்கொடுக்கப் பட்டிருக்கின்றது. அவ்விதமே தலாக்கும் இடங்கொடுக்கப் பட்டிருக்கின்றது. ஒரு மனிதன் கொஞ்சம வெறுப்போடு தன் மனைவியைத தள்ளிவிடலாம். ஆகிலும ஒரு பெண் தனது புருஷனைச சட்டத்தில் தரப்பட்டிருக்கிற நியாயங்களுக் கன்றித் தள்ளக் கூடாது. வியபிசாரம் கடினமாய் ஆக்கினை செயயப்படும். சில எல்லைமானங்களுக்குள் விவாகஞ் செய்வது முஸலிமகளுக்கு விலக்கப்பட்டிருக்கிறது. அஞ்ஞானிகளான அறபிகளால் அநீதியாய்ப் பாவிக்கப்பட்டு வந்த பெண்களுக்கும் அநாத பிள்ளைகளுக்கும் இஸ்லாததில் பாதுகாப்புகொடுக்கப்பட்டது. முகம்மதியர்களிடம் அவாகளின் சொந்தமான சுதந்தரச்சடடம் இருக்கிறது. சில இடங்களில் தவிர பொதுச் சட்டமாகிறது இறந்தவொருவரின் ஆஸ்தி பகுக்கப்படும்பொழுது ஆணுக்கு இருபங்

கும் பெண்ணுக்கு ஒரு பங்கும் கொடுப்பதே. கொலையும் களவும் கடினமான ஆக்கினைகளோடு விலக்கப் பட்டிருக்கின்றன. வேறு அற்ப குற்றங்களுக்கும் இஸ்லா மார்க்கச்சட்டம் ஆக்கினை கற்பித்திருக்கின்றது.

முஸ்லிம்கள் பல பிரிவுகளாய்ப் பிரிந்திருக்கின்றார்கள். அவற்றுள் மெத்தப் பிரதானமான பிரிவுகள் சுன்னியும் சியாவுமே. சுன்னிகள் நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் ஹதீதுகளின் அதிகாரத்தை யொப்புக்கொண்டவர்கள். சியாக்கள் அதனைத் தள்ளுகின்றவர்கள். ஆகிலும் இந்தப்பிரிவுகள் ஒன்றோடொன்று வித்தியாசப்படுவது அற்ப காரியங்களிலேயன்றி யான் எடுத்துக்காட்டிய விசுவாசத்தையும் கிரியையும் குறித்த மூலாதாரமான காரியங்களிலல்ல.

நீங்களறிய விரும்பிய இஸ்லா மார்க்கத்தின் ரூபக்குறிப்பை இப்பொழுது யான் தந்தேன். அம்மார்க்கத்தை விரிவாய் அறியநாடுகிறவர்கள் அதைப்பற்றிய நூற்களை வாசிக்கவேண்டும். முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் பிரதானத்தையும், அவர்கள் வெளிப்பட்ட காலத்தில் அவர்களின் ஜனங்களிருந்த கீழ்மையையும், அவர்களின் போதனையின் காந்தவன்மையினாலும் சீர்திருத்தும தத்துவத்தினாலும் அந்த ஜனங்கள் அடைந்த ஆத்ம தேர்ச்சியையும், இஸ்லாத்தின் தகுதியையும் குறித்து முகம்மதியர்களல்லாத சில ஆசிரியர்கள் தாமாய்க் கூறியிருக்கிற சாட்சிகளுள் சிலவற்றை இங்கு தாராதிருக்கில் இப்பிரசங்கம பூரணமாகாது. ஆதலால் யான் சில சிறந்த மனிதர்கள் சொல்லியிருப்பதை யிப்பொழுது தருகின்றேன்.

கார்லைல் என்பவர் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களைக் குறித்துச் சொல்லுகின்றார்:— "மௌனமுள்ள ஓர் பெரும் ஜீவனை அவர் உண்மையுள்ளவர்களாகவே இருக்கவேண்டியவர்களுள்ளும் கபடமற்ற நேர்மை யுள்ளவர்களா யிருக்தற்கு இயற்கையால நியமிக்கப்பட்டவர்களுள்ளும் ஒருவர். மற்றவர்கள் வெறும சட்டங்களிலும் கேள்விகளிலும நடக்கையில், அவற்றிலேயே தங்கி இருப்பதற்குத் திருத்தி யுடையவர்களாயிருக்கையில இந்த மனிதன் தம்மை வெறுஞ் சட்டங்களில் மறைத்துக்கொள்ளக் கூடாதவராயிருந்தனர். அவர் தனிமையாய்த் தமது முழு ஜீவனோடும் வஸ்துக்களின் உண்மையோடும் இருந்தனர். இருப்பின் (வுஜூது) பெரும இரகசியம் அதன் அச்சங்களோடும், பிரகாசங்களோடும் அவர்மீது துலங்கிக்கொண்டிருந்தது. "இதோ யான் இருக்கின்றேன்" என்ற சொல்ல முடியாத காரியத்தை ஊர்க்கேள்விகள் மறைக்கக் கூடியவைகளாயிருக்கவில்லை. அவ்வித உண்மையில மெய்யாகவே கொஞ்சம தெய்வத்தன்மை யமைந்திருக்கிறது. அவ்விதமான ஓர் மனிதனின் வார்த்தை இயற்கையின் இருதயத்திலிருந்து நேரேவருகின்ற ஓர் சததமாயிருக்கின்றது. அதற்கு மனிதர்கள் செவிகொடுக்கின்றார்கள். அதற்கே யன்றி வேறொன்றுக்கும செவிகொடுக்கக்கூடாது. மற்றவைகளெல்லாம அதனோடு சீதுாகப் பார்க்கில் காற்றாயிருக்கின்றன. இந்தமனிதன் யாத்திரை செய்யும் பொழுது அவரில் ஆயிரக்கணக்கு எண்ணங்கள் முற்கால முதல் உண்டாயிருந்தன. "நான் யாது? நான் வசிக்கிறதும் மனிதர்கள் பிரபஞ்சமெ

ன்றழைக்கிறதுமான இந்த அளவிடக்கூடாத வல்லது யாது? ஜீவன் யாது? மரணம் யாது? நான் எதை விசுவாசிக்கவேண்டும்? நான் எதைச் செய்யவேண்டும்?'' என்ற எண்ணங்களவரிலிருந்தன. ஹிரு மலையினதும் ஸீனு மலையினதும இருண்ட கற்களும் கடுமையான மணலுள்ள தனிமையான இடமும் உத்தரங் கொடுக்கவில்லை. சிரசுக்குமேலால் பிரகாசமுள்ள நட்சத்திரங்களோடு சுழலுகின்றதாயிருந்த பெரும் வானம் உத்தரஞ்சொல்லவில்லை. மறுமொழி கிடைக்கவில்லை. அந்தமனிதனின் சொந்த ஆத்மாவும அதில் ஆண்டவனுடைய அருளிலிருந்து எந்தமட்டிருந்ததோ அதுவுமே உத்தரஞ் சொல்லிற்று''— என்றே.

சார் விலியம்முயர் சொல்லுகின்றார்:—“ஞாபகத்துக் கெடடாத காலமுதல் மக்காவும் அறபுத் தீபகற்பம் முழுதும் ஆத்ம நித்திரை கொண்டிருந்தது. யூதமார்க்கத்தினதும கிறீஸ்துமார்க்கத்தினதும் சொற்ப அநித்திய அதிகாரம் அல்லது ஞான விசாரணை அறபிகளுடைய மனதில் ஓர் அமரிக்கையான குளத்தின் மேற்பரப்பில் இங்கும் அங்கும் உண்டாகிற கொந்தளிப்புக் கொப்பாயிருந்தது. உள்ளே எல்லாம் அடக்கமாயும் அசைவில்லாமலும் இருந்தன. மனிதர்கள் குருட்டுப் பத்தியிலும் கொடுமையிலும் பாவத்திலும் தாழ்ந்திருந்தார்கள். மூத்த மகன் தனது பிதாவின் சொத்துகளைச் சுதந்தரம்பெறும்பொழுது அவரின் கைம்பெண்களையும தனக்கு மனைவிகளாக்கிக் கொள்வது சாமானிய வழக்கமாயிருந்தது. பெருமையும் வறுமையும அவர்களுக்குள் (இந்துக்களுக்குள் உண்டுபட்டதுபோல்) பெண் குழந்தைகளைக் கொலை செய்யும் குற்றத்தை யுண்டாக்கி விட்டது. அவர்களின் வேதம கடினமான விக்கிர காராதனையாயிருந்தது. அவர்களின் விசுவாசம் எல்லாவற்றையும் மேல்விசாரணை செய்து நடத்துகிற தெய்வச் செயலில் இராது மறைந்திருக்கிற ஆவிகளை குருட்டுப் பத்தியோடு அஞ்சுகிறதும் அவற்றின் காருண்யத்தைப் பெற்றுக் கொள்ளவும் அவற்றின் வெறுப்பை யகற்றவும தேடுகின்றதுமாயிருந்தது. இனிமேல் வரப்போகிற ஆயுளும் (ஆகர்) நன்மையினதும் தீமையினதும பிரதிபலனும் அவர்களுக்குக்காரியதகில் தெரியாதிருந்தன. ஹிஜறத்துக்குப் பதின்மூன்று வருடங்களுக்கு முன் மக்கா இந்தகிழ்மையான தன்மையில் உயிரற்றதாயிருந்தது. அந்தப் பதின்மூன்று வருடங்களும் இப்பொழுது எவ்விதமான வேர் மாறுதலை யுண்டாக்கிவிட்டன. நூற்றுக்கணக்கான மனிதர்களடங்கிய ஓர் கூட்டம் விக்கிர காராதனையைத் தள்ளிவிட்டு, ஒரே நாயனின் வணக்கத்தைக் கைக்கொண்டு, ஆண்டவனிடத்திலிருந்து வந்ததாய் அவர்கள் விசுவாசித்த மார்க்கத்தின் வழிகாட்டுதலுக்குத் தம்மைத்தாமே சந்தேகமின்றியொப்புக்கொடுத்துவிட்டு, பலமுறை ஊக்கத்தோடு சர்வவல்லமையுள்ள ஆண்டவனை வணங்கிக்கொண்டும், அவனுடைய இரகத்தைக் கொண்டு மன்னிப்புப் பெற்றுக் கொள்ளுதற்குத் தேடிக் கொண்டும், தருமம், கற்பு, நீதி, நற்செய்கை முதலியவைகளுக்காய் முயற்சித்துக் கொண்டும் இருந்தது. அவர்கள் இப்பொழுது ஆண்டவனின் சர்வவல்லமையையும் தங்களின் எவ்வித அற்பமான காரியத்தின்மீதும் தெய்வ கவனமு

ண்டா யிருப்பதையும் ஓயாமல் உணர்கின்றவர்களா யிருந்தார்கள். எல்லா இயற்கைப் பேறுகளிலும், சீவியத்தின் சர்வ சமபந்தத்திலும், அவர்களின் அந்தரங்க பகிரங்க காரியங்களின் ஒவ்வொரு கழற்சியிலும ஆண்டவனின் கையைக் கண்டார்கள். இவைகளெல்லாவற்றுக்கும் மேலால் அவர்கள் மகிழ்ச்சிகொண்ட புதிய சீவியம் விசேஷ கருணையின் அடையாள மாகவும், அவர்களின் குருட்டுத் தோழர்களின் அவிசுவாசம் ஆக்கினைத் தீர்ப்பின் அடையாள மென்றும் எண்ணப்பட்டன. அவர்களுக்கு முகம்மதே ஜீவனின் தூதராயும், ஆண்டவனின் கீழ் அவர்களின் புது நம்பிக்கைகளுக்குக் காரணராயும் இருந்தனர். அவருக்கு அம்மனிதர்கள் சந்தேகமின்றிக் கீழ்ப்பட்டிருந்தார்கள்'' என்றே.

கேனன் தேலர் சொல்லுகின்றார்:— "குறு ஆனைக் கொண்டு இஸ்தாபிக்கப்பட்ட இஸ்லாமார்க்கம் கடினமான ஏகேச்சுரவாதம் (ஒரே கடவுளை யொப்புக்கொண்ட மதம்.) தெய்வத்தைப் பற்றிய பூர்வ கருத்தில தெளிவற்ற யாதொரு காரியம் அம்மார்க்கத்திலிருக்கவில்லை. அல்லா கிட்டக்கூடாத மகத்துவத்தோடு தூர இருந்து பகிரங்கமான சட்டங்களைக் கொண்டு பிரபஞ்சத்தை நடத்துகிற ஞானத்துக்கடுத்த முதற்காரணமாய் மாத்திரம் இராது எப்பொழுதும் இருக்கின்ற எப்பொழுதும் வேலை செய்கின்ற தத்துவமா யிருக்கின்றான். மேலும் அது தர்க்கமில்லாதவோர் மார்க்கமாயிருக்கிறது. புத்தியை வருத்தப் படுத்தக்கூடிய இரகசியம் அம் மார்க்கத்தில் கிடையாது. ஓர் தெளிவான மாறுத வணக்கத்தோடு மனிதர்கள் திருத்தியடையும்பொருட்டு அவர்களின் எண்ணத்தை அம்மார்க்கம் அடக்கிக் கொண்டது. கடைசியாய் அம்மார்க்கத்தி லிருந்து பத்தர்களையும் பிராணத்தியாகிகளையும் ரூபங்களையும் வணங்குகிற வணக்கமும், எல்லா இரகசியமும், ஞானநுட்பமும், துறவாறும் தள்ளப்பட்டன. மேலும் அம்மார்க்கம் வஸ்துக்களின் தன்மையையும அக்காலத்தில் உலகத்திலிருந்த சாதிகளின் தன்மையையும, மார்க்கத்தின் நோக்கங்களைப் புத்தியின் நோக்கங்களோடு இணக்கப்படுத்தவும் நீளமாயும் ஆழமாயும் தியானித்து அமைக்கப்பட்டிருக்கிறதென்பதற்கு அம்மார்க்கத்தில் அத்தாட்சி யிருக்கிறது'' என்றே.

மேற்படி பிரசங்கம் முடிந்தவுடன் சபாநாயகர் றவறண்டு ஹேறாவர்டு ஜே சார்றர், அப்பிரசங்கத்தை வியந்தும் பிரசங்கியைத் துதித்தும் பேசியபிறகு அவரும அங்கு பிறசன்னரா யிருந்த றவறண்டு பியர்ஸ், றவறணடு எதரின்றன் ஆகிய கிறீஸ்துமத குருமார்களும மற்றவர்களும் இஸ்லா மார்க்கத்தையும் நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களையும் குறித்துப் பலகேள்விகளைக் கேட்டார்கள். அவற்றுக்குத் தக்க திருத்தியான வுத்தரங்கள் பிரசங்கியால் கொடுக்கப் பட்டன. $7\frac{1}{2}$ மணியளவில் சபைகுலைந்தது.

[மேற்படி றவறண்டு எதரின்றன் மிக்க தயாள குணமுள்ளவோர் இங்கிலீஷ் துரைமகன். "ஒப்ஸர்வர்'' பத்திராதிபரான கனம். பெர்கஸன் துரையின் மருமகன். இவர் எமது பிரசங்கத்தை வியந்து எமக்குத் துதிகூறியதோடு எம்மைத் திரும்பச் சந்தித்துப் பேசத் தாம் விரும்புகிறதாயும் தெரிவித்தனர்.

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA LIBRARY

லும் அவருடைய மரணம் சமீபித்திருந்ததை யவராவது பிறராவது அறிந்திருக்கவில்லை. பிரசங்கம் முடிந்து ஒருவாரத்தின் பின் அத்துரைமகன் சடுதியாய் நோய்வாய்ப்பட்டு ஆரோக்கிய சாலையில் இரணவைத்தியஞ் செய்யப்பட்டும் சுகமடையாமல் தேகவியோகமாயினர். அவரின் மரணத்தால் அவரின் மனைவி மக்களுக்கும் சுற்றத்தவர்களுக்கு முண்டான துக்கத்துக்காய் அவர்களோடு அனுதாபப்படுகின்றோம்.-பத்திராதிபர்.]

---

صحيح بخاري

## ஸஹீஹ் புகாரி.

—:o:—

கனம் முகிய்யத்தீன் சாகிபு அகமது லெவ்வை ஆலிம்சாகிபு அவர்களால் முஸ்லிம் பாதுகாவலனுக்காய் விசேஷமாய் மொழிபெயர்க்கப்பட்டது.

(தொடர்ச்சி)

நபிசல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளம் பற்றியதாக அபீஹுறைறா றளியல்லாகு அன்கு அவர்களைத் தொட்டும் வரப்பட்டிருக்கிறது முனாபிக்கின் அடையாளமாகிறது மூன்று குணங்களாயிருக்கும், அவையாவன; ஒன்றைச் சொல்வானாயின் பொய்யைச் சொல்வான், வாக்களித்தால் அதறகு மாறு செய்வான், நம்பிக்கைவைத்தால் சதிமோசம் செய்வான், என்பவையாம்.

நபிசல்லல்லாகு அலைஹிவசல்லம் திருவுளம் பற்றியதாக அப்துல்லா இபுனு அம்றைத் தொட்டும் வந்திருக்கின்றது. நாலு குணங்கள் ஒருவனிலிருப்பின் அவன் கலப்பற்ற முனாபிக்காயிருப்பான் அவையாவன:— நம்பிக்கைவைத்தால் சதிமோசஞ் செய்தல், ஒன்றைச் சொன்னால் பொய் சொல்லுதல், வாக்களித்தால் மாறு கொள்ளுதல், வழக்குப்பேசினால் பொய் பகருதல், என்பவையாம்.

றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளம் பற்றியதாக அபீஹுறைறா றளியல்லாகு அன்குவைத் தொட்டும் வரப்பட்டிருக்கின்றது ஒருவன் ஈமான் கொண்டவனாகவும தவாபை ஆசை வைத்தவனாகவும் லைலத்துகத்றுடைய இரவிற் றுவீஹாத் தொழுவானாயின் அவனுக்குக் கடந்துபோன பாவமனைத்தும் பொறுக்கப்படும்.

றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லம திருவுளம்பற்றியதாக அபீஹுறைறா றளியல்லாகு அன்குவைத் தொட்டும் வரப்பட்டிருக்கின்றது, ஒருவன் ஈமான்கொண்டவனாகவும, தவாபை யாசை வைத்தவனாகவும் றமளான் மாசம் நோன்பு வைத்தானாயின் அவனுக்கு நிகழ்ந்த பாவமனைத்தும் பொறுக்கப்படும்.

நபிசல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமபற்றியதாக அபீஹுறைறா றளியல்லாகு அன்குவைத் தொட்டும் வரப்பட்டிருக்கின்றதுமார்க்கமாகிறது மிக இலேசான ஒன்று, அது மிகைபெற்ற ஒருவனை அன்றி அம்மார்க்கத்தை யாரும் பெலனாய்க் கொள்ளமாட்டான். ஆகவே, அதை நோக்கிவையுங்கள், அதற்கு முடுக விருந்துகொள்ளுங்கள், நற்சமாசாரங் கூறுங்கள், காலையிலும் மாலையிலும் இரவிற் சொற்

ப்ரோதத்திலும் உதவிதேடுங்கள் என்று.

பர்ருவைத் தொட்டும் அபூஇஸ்ஹாக்குஅறிவித்தார் நபிசல்லல்லாகு அலேஹி வசல்லமவர்கள் மதீனாவுக்குச் சென்ற தொடக்கத்தில் அவர்கள் பாட்டன்மார்கள், அல்லது, அன்சாரிகளில் நின்றுமுள்ள மாமன் மார்களிடம் போய்த் தங்கி யிருந்தார்கள். அன்றியும் நாயகமவர்கள் பைத்துல் முகத்திஸைப் பதினாறு மாசம் அல்லது பதினேழு மாசக்காலமாகக் கிபிலாவாய்க் கொண்டு தொழுது வந்தார்கள். ஆயினும், கஉபாவைக் கிபுலாவாயெடுத்துக் கொள்வது நாயகமவர்கட்குமிகவுமே பிரீதியாயிருந்தது, அப்படியிருக்குங்காலையில் கஉபாவைக் கிபுலாவாயாக்கிக் கொள்ளும்படி அல்லாஹுத் தஆலாவின்து ஏவல வந்தது. முதலாவதாய் அவர்கள் கஉபாவைக் கிபுலாவாய்க்கொண்டு தொழுத தொழுகையானது அஸறுத் தொழுகையாயிருந்தது. அன்று அவர்களோடு தொழுதவர்களுள் ஒருமனிதன் மற்றய பள்ளிவாசலுக்குச் சென்று பார்க்க அவர்களனைவரும் வழக்கம்போல் பைத்துல் முகத்திஸை முற்கொண்டு ருகூஇல இருக்க அவர்கண்டு அல்லாவின்பேரில் சத்தியமாக இன்று மக்காத் திசையை யெதிர்கொண்டு றசூல் சல்லல்லாகு அலேஹிவசல்ல மவர்களுடன் இந்தத் தொழுகையைத்தொழுதேன் எனப் பகர்ந்தார். அப்போது அவர்களனைவரும் நின்றநிலையிலேயே கஉபாப் புறமாய்த் திருமபித் தொழுதார்கள். நபிநாயகமவர்கள் பைத்துல்முகத்திஸை யெதிர்கொண்டு தொழுதுவருவது எஹூதிகட்கும், கஸாறாக்களுக்கும மிகவுமே வியப்பாயிருந்தது. பிறகு கஉபாப்புறந்திரும்பவே அது அவர்கட்குப் பொருத்தமற்ற ஒன்றாயிற்று.

பர்றுவைத் தொட்டும் அபூ இஸ்ஹாக்கு அறிவித்தார். கஉபாப்புறந்திரும்பித் தொழுமுன், பலர் இறந்துபோயிருக்கின்றார்களே போரிடத்திலும் கொல்லப்பட்டிருக்கின்றார்களே, அவர்களது தொழுகைக்கு எவ்வாறாகுமோ? அறியப்படடிலது என்று எஹூதிகளும் நசாராக்களும் சொல்லவாறார்கள். அப்போது, உங்களுடைய தொழுகையை அல்லாகுத் தஆலா பழுதாக்க மாட்டான் என்ற கருத்தமைந்த ஆயத்தை வல்லநாயன் இறக்கி வைத்தான்.

அபூஸயீதுல் குத்ரீ சொல்லுகிறார் றசூல்சல்லல்லாகு அலேஹிவசல்லமவர்கள் சொல்லக்கேட்டேன் ஒரு அடிமை இஸ்லாமார்க்கத்திற் புகுந்து அவனுடைய இஸ்லாம் அழகாய் விடடுதாயின் அவனது சென்ற பாவமனைத்துக்கும் அது அபராதமாகி விடும். அதன் பின்னால் செய்யும் ஒரு நன்மைக்குப் பத்துவீதம் அங்ஙனமே எழுநூறுவரையும் இரட்டிப்பாகும். ஒரு பாவமாகிறது அது ஒன்றெனவே வரையப்படும். அல்லாஹுததஆலா அதைப் பொறுத்துகொள்வாறாயின், அந்தப் பாவமும் அழிந்து விடும்.

ஆயிசா நாயகியைத்தொட்டும் உரைவது அறிவித்தார். நபிசல்லல்லாகு அலேஹிவசல்ல மவர்கள் ஆயிசா நாயகியிடம் வந்தபோது ஒரு பெண்ணானவள் அவர்களிடமிருந்தாள். அப்போது, நாயகமவர்கள் இவள் யாரென்று கேட்க அதற்கு ஆயிசா நாயகி இந்தப் பெண்ணானவள் அவளுடைய தொழுகையில் நின்றும் நீளமாய் "திக்று" செய்துகொண் டிருக்கின்றாளெனச் சொன்னார்கள். அதற்கு, அவளுடைய விருப்பப்படி

யே விட்டுவிடுங்கள் நீங்களும் உங்கள் தகுதிக்குத் தக்கபடி செய்யுங்கள். அல்லாவின்பேரில் சத்தியமாக நீங்கள் அலுத்துப்போனாலும், அல்லாகுத்தஆலா சடையமாட்டான். மார்க்கத்தில் மிக உவப்பானது விடாமுயற்சியாய்க் கொண்டுவரும் ஒன்றேயாமென நபிநாயகம் திருவுளம் பற்றினார்கள்.

லாயிலாஹ இல்லல்லாஹு வென்று சொன்னவன் அவனது கல்பில் ஒரு தொலிக்கோதுமையின் நிறை ஈமானிருப்பின் நரகத்தை விட்டும் புறத்திப்படுத்தப்படுவான் என்றும் லாயிலாஹ இல்லல்லாஹு வென்று சொன்னவன் அவனது கல்பில் ஒருமணிக்கோதுமை நிறை ஈமானிருப்பின் நரகத்தை விட்டும புறத்திப்படுத்தப்படுவான் என்றும், லாயிலாஹ இல்லல்லாஹு வென்று சொன்னவன் அவனுடைய கல்பில் ஓரணுவின் நிறை ஈமானிருப்பின் நரகத்தைவிட்டும் புறத்திப்படுத்தப்படுவான் என்றும, நபிநாயகம் திருவுளமபற்றியதாக உமறிபுனுல் கத்தாபு றளியல்லாகு அன்ஹு அவர்களைத் தொட்டும் வரப்பட்டிருக்கின்றது.

ஒரு எஹூதி உமறிபுனுல் கத்தாபு றளியலலாகு அன்கு அவர்களிடம் வந்து அமீறுல்மூமினீனே உங்களுடைய வேதத்தில் ஒரு ஆயத்து இருக்கின்றது அந்த நீங்கள் ஓதி வருகின்றீர்கள். அந்த ஆயத்து எஹூதிகளாகிய எங்கள் கூட்டத்தில் இறங்கியிருப்பின், அந்த நாளைக் கொண்டாட்டத் தினமாய் நாங்கள் எடுத்துக்கொள்வோம என்று சொன்னான். அந்த ஆயத்து எதுவென்று அவர்கள் கேட்க, இன்று உங்களது மார்க்கத்தைப் பூரணப் படுத்திவிட்டேன், என்னுடைய "நிஉமத்து"களை நிறப்பிவிட்டேன், இஸலாம் மார்க்கத்தை உங்களுக்கு மார்க்கமாய்த் தெரிந்துகொண்டேன், என்ற கருத்தமைந்த ஆயத்தை அந்த எஹூதி சொல்லவே, நிச்சயமாய் அந்த தினத்தையும், நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுக்கு அந்த ஆயத்து இறங்கிய தலத்தையும், அறிவேன் என்று உமறு றளியல்லாகு அன்கு சொல்லியும ஜும்ஆநாளில் "அறபாவில" நாயகமவர்கள் நிற்கும் போது அது இறங்கியதென்றுஞ் சொன்னார்கள்.

தல்ஹத்திபுனு உபைதில்லாவைத் தொட்டும வரப்பட்டிருக்கின்றது தலை திறந்தவராய் ஒரு மனிதன் றசூல் சல்லல்லாஹு அலைஹிவசலலமவர்களிடம் வந்தார் அவர் முநகுக வரையும் அவரது சத்தத்தின் ஓசை எங்கட்குக் கேட்கப்பட்டதே தவிர அவர் சொல்வது இன்னதென்று விளங்கிக் கொள்ளப்படவில்லை. அம்மனிதன் நபிநாயகமவர்களை முடுகி இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றிக் கேட்டார். அப்போது, இரவிலும் பகலிலும ஐந்து தொழுகைகளென நாயகம பகர்ந்தார்கள். இதல்லாமல் இன்னுமுண்டோ? வென்று அம்மனிதன் கேட்க ஸுன்னத்தானதைத்தவிர இல்லையென்று சொல்லி றமளான் மாசம நோன்புவைத்தல் என்றுந் திருவுளம் பற்றினார்கள். இதை விட இன்னுமுண்டோ? வென்று அம்மனிதன் கேட்க சுன்னத்தானதைக்கவிர இல்லையென்று சொல்லி "ஸக்காத"துக்கொடுத்தல் என்றும பகர்ந்தார்கள். இதல்லாமல் இன்னுமுண்டோ? வென்று அம்மனிதன் கேட்க ஸுன்னத்தானதைத் தவிர இல்லையென்று சொன்னார்கள். அம்மனிதன் அல்லாவின்பேரில் சத்தியமாக இ

வற்றைவிட நான் அதிகப்படுத்த
வுங் குறைக்கவுமாட்டேன், என்
று சொல்லிப் போய்விட்டார். ற
சூல்சல்லல்லாகு அலைஹிவசல்ல
மவர்கள் அம்மனிதன் உண்மை
சொல்லியிருப்பின் ஜெயம் பெற்
றுனெனத் திருவுளம் பற்றினார்
கள்.

றசூல் சல்லல்லாகு அலைஹிவ
சல்லமவர்கள் திருவுளம்பற்றிய
தாக அபீஹுறைறு றளியல்லாகு
அன்கு அவர்களைத்தொட்டும் வ
ரப்பட்டிருக்கின்றது ஒருவன் ஈ
மான் கொண்டவனும் நன்மை
யை ஆசைவைத்தவனும், முஸ்
லிமான மனிதன் "ஜனுஸா" வை
த்தொடர்ந்துபோய் அதற்காய்த்
தொழுது அதை யடக்கம்பண்
ணி முடியும்வரையும் அத்துடன்
இருந்தானுயின் தவாபில் நின்று
ம இரண்டு கிறுத்தைப் பெற்றுக்
கொள்வான். ஒரு கிறுத்தாகிற
து "உஹது" மலையத்தனையா யி
ருக்கும். தொழுதபின் அது அட
க்கம் பண்ணப்பட முன்னிதாய்
அவ்விடம் விட்டுத் திரும்பி விடு
வானுயின் தவாபில் நின்றும் ஒ
ரு கிறுத்தைப் பெற்றுக்கொள்
வான்.

இபுனு அபீமுலைக்கா சொன்
னார்கள் நபிசல்லல்லாகு அலைஹி
வசல்ல மவர்களின் அஸ்ஹாபிக
ளுள் முப்பதுபெயரை நான் சந்
தித்தேன். அவர்களனைவருந் தங்
கள்பேரில் நிபாக்கைப் பயந்தவர்
களா யிருந்தார்கள். அவர்களில்
ஒருவராவது ஜிபுரீ லுடையவும்,
மீககாயீ லுடையவும், ஈமானின்
பேரில் இருப்பதாய்ச் சொல்லவி
ல்லை.

ஹஸனைத் தொட்டும் வரப்பட்
டிருக்கின்றது அவர்கள் சொன்
னார்கள் மூமினே அன்றிப் பயப்
படமாட்டான். முனாபிகே தவிர
அச்சந் தீரமாட்டான் பயப்பட
த்தக்க கருமமாகிறது ஒருவருக்
கொருவர் கொலைசெய்து கொள்
வதிலும், பாவமன்னிப்புத் தே
டாமல் மாறுன கருமங்களில் பிர
வேசிப்பதிலும், தரிப்பா யிருப்
பதேயாம். அவர்கள் அறிந்திருப்
பின் அவர்கள் செய்யும பாவமா
ன கருமங்களில் தரிபடார்களெ
ன்று வல்லநாயன் திருவுளம்பற்
றியிருக்கிறான்.

நபிசல்லல்லாகு அலைஹிவசல்
லமவர்கள் திருவுளம் பற்றியதா
க அப்துல்லா அறிவித்தார். மு
ஸ்லிமான மனிதனை யேசுவதும்,
கெட்ட கருமங்களில் தரிப்பா யி
ருப்பதும், கொலைசெய்வதும், கு
பிரை வருவிக்கும்.

உப்பாத்தத் இபுனுல் ஸாமித்
அறிவித்தார் றசூல் சல்லல்லா
கு அலைஹிவசல்ல மவர்கள் லைல
த்துல் கத்றைக்கண்டு அதைப்ப
ற்றி அறிவிக்க வரும்வழியில் இ
ரண்டு முஸ்லிம்கள் ஏசிக்கொண்
டு நின்றார்கள். நாயகமவர்கள் த
ங்கள் அஸ்ஹாபுகளிடம் வந்து
லைலத்துல் கத்றைப்பற்றி உங்க
ளுக்கு அறிவிக்க நான் வருஞ்சம
யத்தில் இன்னின்னார் இரண்டு
பேர் ஏசிகொண்டு நின்றார்கள்
அதற்குள் அது உயர்த்தப் பட்
டாயிற்று. ஆகவே, அது அப்ப
டியானது நன்மையா யிருக்கப்
போதும். நீங்கள் இருபத்தேழு,
இருபத்தொன்பது, இருபத்தை
ந்து, ஆகியாம் நாட்களில அதை
த்தேடிப் பெற்றுக்கொள்ளுங்கள்
என்று திருவுளம்பற்றினார்கள்.

அபீஹுறைறு றளியல்லாகு
அன்கு அவர்களைத் தொட்டும் வ
ரப்பட்டிருக்கின்றது ஒரு நாள்
நபிசல்லல்லாகு அலைஹிவசல்ல
மவர்கள் மனிதர்களோடிருக்கும்
போது ஒருமனிதன் வந்து ஈமா
னுவதென்ன? வென்று வினவ, ஈ
மானுவது அல்லாவைக் கொண்

டும், மலாயிகத்துகளைக் கொண்டும், அவனைச் சந்திப்பதைக்கொண்டும், றசூல்மார்களைக் கொண்டும்; மவுத்துக்குப்பின் திரும்ப எழுப்புவதைக் கொண்டும், நம்பிக்கை வைப்பதென்று பகர்ந்தார்கள். இஸ்லாமாவதென்ன? வென்று அம்மனிதன் கேட்க, இஸ்லாமாவது அல்லாவை வணங்குதலும், அவனுக்கு இணை வைக்காதிருத்தலும், தரிபாடாய்த் தொழுதலும், பறுளான ஸக்காத்துக் கொடுத்தலும், றமளான் நோன்பு வைத்தலும், என்று பகர்ந்தார்கள். இஹ்ஸானைப் பற்றியவர் கேட்டதற்கு இஹ்ஸானாவது அல்லாகுத்தஆலாவை நீர் கண்டுகொண்டிருப்பதைப் போல் வணங்குவது, ஏனெனில், அவனை நீர் காணாதிருப்பினும் உம்மையவன் கண்டுகொண்டிருக்கிறான் ஆதல்பற்றியே என்று பகர்ந்தார்கள். உலகமுடிவைப்பற்றிக் கேட்டார். அதற்கு அதைக்குறித்துக் கேட்டவரை விட கேட்கப்பட்டவர் மிக்க அறிந்தவரல்லவென்று நாயகம் பகர்ந்து, பின்னால் அதைப்பற்றிய சில வடையாளங்களைக் கூறுவேன் என்று சொல்லி வெள்ளாட்டி அவளுடைய நாயகியைப் பெறுவாளாயின் ஒட்டகை மேய்ப்பவர்கள் பாரிய கட்டிடங்கள் கட்டுவார்களாயின் உலகமுடிவை வழிபார்த்திரும் என்று திருவுளம்பற்றியும், ஐந்து கருமங்களை அல்லாவே அல்லாமல அறியமாட்டான் என்று கூறி அவ்வைந்து கருமங்களையும் பொதிந்துள்ள ஆயத்தை நபிகணாயகம் ஓதினார்கள். அதாவது, நிச்சயமாய் உலகமுடிவைப்பற்றிய அறிவானது அல்லாவிடத்திலேயே, மழையை யிறக்கிவைப்பவன் அவனே, கெற்ப அறைக்குள் உற்பத்தியாகும் சிசுவையும் அவனே அறிந்தவன். ஒரு நபுஸும் நாளை எதுசெய்யுமென்று அறியவே மாட்டாது, எந்தப் பூமியில் மவுத்தாகுமென்று ஒரு நபுஸும் அறிந்துகொள்ளமாட்டாது, நிசசயமாய் அல்லாவானவன் எல்லாவற்றையும் மிகவுமே அறிந்தவன் என்பதேயாம். பிறகு அம்மனிதன் போய்விட்டார். அதன்பிறகு அவரைக் காணப்படவேயில்லை. அந்தமனிதரோ அவர் ஜிபுரீலென்றும், மனிதர்களுக்கு அவர்களது மார்க்கத்தைப் படிப்பூட்ட வந்தவர்களென்றும் நபிநாயகம் திருவுளம் பற்றினார்கள்.

ஆமிறைத் தொட்டும் வந்திருக்கின்றது அவர் சொல்லுகிறார் றசூலுசல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளம்பற்றியதாக நுஉமானிபுனு பசீர் சொல்லக் கேட்டேன். ஹலாலானவைகளும், ஹறாமானவைகளும், வெளிப்படையாயிருக்கின்றன, ஆயினும் அவையிரண்டுக்கிடையும் பிசகப்பண்ணுதல்களுண்டாயிருக்கின்றன. மனிதர்களுள் அனேகர் அவற்றை யறிய மாட்டார்கள். ஆகவே, அந்தப் பிசகப்பண்ணுதல்களைப் பயந்து அவற்றை விலகிக் கொண்டவன் தன்னுடைய மார்க்கத்தையும், மானத்தையும் காப்பாற்றிக் கொண்டான். குறித்த பிசகப்பண்ணுதல்களில் பிரவேசித்தவன் வரம்பிலே மேய்ப்பவனின் மாடுகள் வயலிலும் பிரவேசிக்கும் என்பதை நிகர்த்து ஹறாமான கருமங்களிலும் அவன் பிரவேசிப்பான். ஆகவே, சகல அரசர்கட்கும் விரோதித்தல் உண்டாயிருக்கின்றது, அல்லாவுடைய விரோதித்தலாகிறது அவன் ஹறாமாக்கிவைத்த கருமங்களேயாம். அறிந்துகொள் சரீரத்தில் சதைபிண்டமுண்டாயி

ருக்கின்றது, அது இணக்கப்பட்டிருப்பின் சரீரமடங்கலும் இணக்கப்படும். அது கெட்டுபோகில், சரீரமுழுதும் கெட்டுப்போகும். அந்த சதைப்பிண்டமாகிறது "கலபு" என்று அறிந்துகொள்.

அபீஜம்றுவைத் தொட்டும் வரப்பட்டிருக்கின்றது அவர்சொன்னார் இபுனு அப்பாஸோடு நானிருப்பேன். அவர்கள் தங்கள் கட்டில்மீது என்னை யிருக்கச்செய்வார்கள். ஒருபோது அவர்களது காசுபணத்தில் நின்றும் ஓர்பகுதியை யெனக்குத் தருவதாக வாக்களித்து அவர்களிடமே என்னைத் தரிப்பாயிருக்கும்படி சொன்னார்கள். அங்ஙனமே இரண்டு மாசக் காலமாக அவர்களோடு இருந்தேன். எனக்கு அவர்சொன்னார் அப்துல்கைஸின் கூட்டம் நபிசல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களிடம வந்தபோது இந்தக் கூட்டம் யாரென நாயகமவர்கள் வினவ "றபீஆ" வென்று சொன்னார்கள். அப்போது பழிப்பும் சலிப்புமற்ற கூட்டத்தவர்கட்குச் சந்தோசம் என்று நாயகமவர்கள் பகர்ந்தார்கள். பிறகு அக்கூட்டத்தவர்கள் நபிநாயக மவர்களைப்பார்த்து அல்லாவுடைய றசூலே *சங்கையான மாசங்களிலேயே தவிர தங்களிடம் வருதற்கு நாங்கள் கூடியவர்களல்ல, அதேனெனில், எங்கட்கும், உங்கட்குமிடையே "முளர்" கோத்திரக் காபிர்களில் நின்றும் ஒரு கூட்டத்தார் இருக்கின்றார்கள். அதுவே எங்கட்குத் தடையாயிருக்கின்றது. ஆதலபற்றி நாங்கள் செய்யவேண்டிய கடமைகளை எங்கட்குக் கற்பியுங்கள். எங்களோடொத்த மற்றவர்கட்கும் நாங்கள் தெரிவித்து அதன் வழியாய் மோட்சகதி யடைவோமாக வென்று அவர்கள்கூறி குடிவகையைப்பற்றி நாயகமிடம்கேட்டார்கள்.

அப்போது, நாலு கருமங்களைச செய்யும்படிக்கும், நாலு கருமங்களை விட்டுவிடும்படிக்கும், நாயகமவர்கள் கற்பித்தார்கள். அவர்கட்குச்செய்யும்படி கற்பித்த நாங்கு கருமங்களுமாவன, ஓரே நாயனாகிய அல்லாவை ஈமான் கொள்ளுதல் என்று நாயகம் பகர்ந்து, அது எவ்வாறென்று நீங்களறிவீர்களா வென வினவினார்கள். அதற்கு அல்லாவும் அவனுடைய றசூலும் மிகவறிந்தவர்களென்று விடைபகர்ந்தார்கள். அதற்கு வணங்கப்படத்தக்க நாயன் அல்லாவைத்தவிர இல்லை. முகம்மதாகிரவர்கள் அல்லாவின் திருத்தூதர் என்று சாட்சிசொல்லுதல, நியமமாய்த்தொழுது வருதல, ஸகாத்துக்கொடுத்தல் ஆகியாம்வைகளும், கொள்ளை முதலில் நின்றும ஐந்திலொரு பங்கை பைத்துல்மாலுக்குச் சேர்த்தலுமென்று நாயகமவர்கள் பகர்ந்தார்கள்.

அவர்கட்கு விலக்கப்பட்ட நான்கு கருமங்களுமாவன, சாராயமட்பானை, மட்குடம், மரப்பானை, சுரககாய்க்குடம் ஆகியாம்வைகளெனச் சொல்லி, அவற்றைப் பாவிக்காது உங்கள்நபுஸுகளைக் காத்துக் கொள்ளுங்கள். உங்களோடொத்த மற்றையவர்கட்கும இவற்றைத் தெரிவியுங்கள் என்று திருவுளம் பற்றினார்கள்.

நபிசல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளம் பற்றியதாக அபீமஸ்ஊதைத் தொட்டும் வரப்பட்டிருக்கின்றது ஒரு மனித

* சங்கையானமாசங்கள், துல்கஃதா, துல்ஹஜ்ஜி, முஹர்ரம், றஜபு ஆகிய மாசங்களாம்.

ன் தன்னுடைய மனைவி மக்களுக்கு நன்மையை நாடிச்செலவு செய்வாராயின் அது அவனுக்கு ஸதக்காவாக ஆகிவிடும்.

றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமபற்றியதாக ஸஉதிபுனு அபீவக்காஸ் தெரிவித்தார் அல்லாகுத்தஆலாவின் முகத்தைநாடி நீர் செலவுசெய்து வருதல் முதற்கொண்டு உம்முடைய மனையாட்டிக்கு நீர் அளிக்கும் உணவு ஈறாக சகலதுக்கும் அல்லாவிடத்தில் நற்கூலியைப் பெற்றுக்கொள்வீர்.

ஜுபைரிபுனு அப்துல்லாவைத் தொட்டும் வரப்பட்டிருக்கின்றது அவர்கள் சொல்லுகிறார்கள் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கட்குத் தொழுகையை நான் நியமமாய்த் தொழுது வருவதிலும், ஸக்காத்துக் கொடுப்பதிலும், முஸ்லிம்கட்கு நல்லுபதேசம் போதிப்பதிலும் வார்த்தைப்பாடு செய்துகொடுத்தேன்.

ஜுபைரிபுனு அப்தில்லா சொல்லக்கேட்டேன் என்று ஸியாதிபுனு இலாக்கா சொல்கிறார் முகீறத்திபுனு ஷுஃபா மவுத்தான தினத்தில் குறித்த ஜுபைரிபுனு அப்தில்லா எழுந்து அல்லாவைப் புகழ்ந்தபின்னர், ஒப்பற்ற ஒரே நாயனாகிய அல்லாவைப் பயந்து கொள்ளுங்கள், மேலான குணத்தையும், தயாளத்தையும், கைப்பற்றிக்கொள்ளுங்கள். உங்களுக்கு ஒரு அரசர் தற்போது வருவார அவ்வரசரிடம் மன்னிப்புத் தேடுங்கள். அவர் மன்னித்துக்கொள்வார் என்றுசொல்லிப் பின்பும் சொன்னார், நபிசல்லல்லாகு அலைஹிவசல்ல மவர்களிடம் இஸ்லாம்மார்க்கத்தின் பேரில் உங்களுக்கு நான் வார்த்தைப்பாடுசெய்து தந்தேனென்று சொன்னேன். அப்போது முஸ்லிம்களுக்கு நல்லுபதேசம போதிப்பதையும் எனக்கு நாயகமவர்கள் கற்பித்தார்கள். நானும அங்ஙனமே அவர்கட்கு பைஅத்துச் செய்து கொடுத்தேன். இப்பள்ளிவாசலினுடைய நாயன்பேரில் சத்தியமாக நிச்சயமாய் உங்களுக்கு நான் நல்லுபதேசம் போதிக்கிறவனென்று சொல்லி அல்லாவிடம் பாவமன்னிப்புத் தேடியபின் இறங்கிவிட்டார்கள்.

(இன்னும் வரும்.)

---

## அறபு ராச்சிய சரித்திர சுருக்கம்.

(தொடர்ச்சி.)

சென்ற 6ம் இலக்கப் பத்திரிகையில் அலிறளியல்லாகு அன்கு அவர்களின் தேக வியோகத்தோடு இஸ்லாத்தின் பிரஜாதிபத்திய அரசாட்சி முடிந்தது வரையிற் சொன்னோம.

பின்னேக்கம்

றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லம் அவர்கள் மதீனாவிலிருந்த பத்துவருடக் காலத்தில் யுத்தஞ் செய்துகொண்டிருந்த பற்பல கோத்திரத்தார்களும கூட்டத்தார்களும ஒரேசாதியாய் ஒரே பெரும கருத்தோடு ஐக்கியபபடுத்தப்பட்டார்கள், அந்த சொற்பகாலத்துக்குள் செயயபபட்ட மேலே சரித்திரத்தில் எழுதப்பட்ட அதிஜயமான காரியங்களுள் ஒன்றாய் எக்காலமும் இருக்கும்.

அவ்வாறு கிழ்ப்படுத்தப் பட்ட கோத்திரத்தவர்கள் அபூபக்கர்சித்தீக்கு றளியல்லாகு அன்கு அவர்களுடைய காலத்தில் கலகஞ்செய்து பழைய தன்மையிலாகிவிடுதற்குத் தெண்டித்தார்கள். ஆகிலும் அவர்கள் ஜயமடையவில்லை. இதன்பிறகு நீல்ஆற்றின் பெ

ருக்குக் கொப்பிடக் கூடியகாரியமேசம்பவித்தது. முன் துன்பமும் உடைப்பும் உண்டுபடுகின்றன. வெள்ளம கழிந்தபின்னர் பூமி செழிப்படைகின்றது. அயல்தேசத்தின் சாதியார்களின் பகையை யடக்குதற்காய் அறபிகள் முன்னேறிய நிமித்தம் ஜனங்கள் சீர்திருத்தப்பட்டது போல் தேசங்களும் பக்குவப்படுத்தப்பட்டன. பிரஜாதிபத்திய அரசாட்சி நிலைத்திருந்த முப்பது வருடங்களில் அறபிகளுள் ஓர் அதிஜயமான மாறுதல் உண்டுபட்டது. ஜனங்கள் பழையதன்மையிலிருந்தாலும் முன் அவர்களின் வளர்ச்சிக்கும் பின்பு அவர்களின் அழிவுக்கும காரணமாயிருந்த விஷயங்களை விரும்புகின்றவர்களாயிருந்தார்கள். பிரதான பட்டணங்கள் அழகான கட்டிடங்களைக்கொண்டு அலங்கரிக்கப் பட்டன. ஜனங்களின் சிவியம்போக நுகர்ச்சி யுள்ளதாயிற்று. அறபுதேசத்தில் போலவே அறபிகள் பிடித்த ஊர்களிலும் தங்களோடு அன்னியர்கள் சேர்ந்து கொள்ளுதற்கு இடங்கொடுத்திருந்தார்கள். இஸ்லாமார்க்கத்தை அநுசரித்த பேர்சியர், துருக்கியர், கிறீக்கர் ஆகியவர்கள் சிலஅறபு குடும்பத்தை அல்லது கூட்டத்தைச் சேர்ந்தவர்களாய் (மவுலாக்களாகி) விட்டார்கள். இதனால அந்த அறபுக் குடும்பத்துக்கு அல்லது கூட்டத்துக்குப் பலமும அதனோடு சேராத அன்னிய முஸ்லிம்களுக்குக் கனமும் உண்டுபட்டன. அறபிகளெல்லோரிலும் ஒரே வேதகருத்து மிகைத்திருந்தாலும் அவர்கள் ஒரே கூட்டமாய்ப பூரணமாகச் சேர்ந்துவிடவில்லை. ஆகையால பிரஜாதிபத்திய அரசாட்சியின் முடிவில இஸ்லாத்தின் இராசசியம் இரு பிரிவுகளாய்ப் பிரிந்திருக்க நாங்கள் காண்கின்றோம். அப்படியே முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுடைய காலத்தில் மக்கா பிரிந்திருந்தது. ஒரு பிரிவு அவர்களின் குடும்பமாகிய பனூஹாசிமுக்கும் மற்றது அவர்களின் சத்துருக்களான உமையாக்கோத்திரத்துக்கும் பக்தியுடையதாயிருந்தன. அலிக்கும் முஆவியாவுக்கும் இடையில் உண்டுபட்ட பகையே காரணமாய் ஹிமாயா கோத்திரத்தவர்களுக்கும் முளர் கோத்திரத்தவர்களுக்கும் இடையில் குழப்பமுண்டுபட்டாலும் இதுகாறும் வேதபேதகங்களுண்டாகவில்லை. காரிஜியாக்கள தாமும் இராஜபக்தி (வையத்) விஷயத்திலேயே வித்தியாசப்பட்டு உமறுக்குப் பிறகு ஒரு கலீபாவையும் அங்கீகரிக்க அலலத்தட்டினார்கள்.

கலீபாவே அரசாட்சியின் சிரேஷ்ட தலைவர். அவர்களுக்குத் துணையாய்மூத்தோர்களின் சங்கமொன்றிருந்தது. அச்சங்கத்தில் நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் அஸஹாபிகளுள் பிரதானமானவர்களிருந்தார்கள். அவர்கள் பிரதான பள்ளிவாசலில் சபை கூடினார்கள். அவர்களுக்கு மதீனாவிலிருந்த மென்மக்களும் பதவித்தலைவர்களும துணையாயிருந்தார்கள். அஸ்ஹாபிகளுட் பலர் பிரதான உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டார்கள். அபூபக்கர் அவர்கள் கலீபாவாயிருந்த காலத்தில் உமறுறளியல்லாகு அன்கு நீதிவிஷய தலைவராய் நியமிக்கப்பட்டிருந்தார்கள். எளியவர்களுக்காய் அறவு பண்ணைப்படுகிற வரியைப் பங்கிடுகிற வேலையும் அவர்களுக்கே சாட்டப்பட்டிருந்தது. அலிறளியல்லாகு அன்கு அவர்கள் கல்வியுடையவர்களாயிருந்த

தால் அவர்களுக் குகடிதங்கள் எழுதுகிற வேலையும் யுத்த கைதிகளை மேல் விசாரணைசெய்தல், அவர்களை நடத்தல், அவர்களுக்காய்ப் பிரதிக்கிரயம் பெற்றுக்கொண்டு அவர்களை விடுதலையாக்குதல் ஆகிய வேலைகளும் சாட்டப்பட்டன. இன்னுமொரு அஸ்ஹாபி சேனாதிபதியாய் நியமிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு துரைத்தனத்தின் ஒவ்வொரு விஷயமும் கவனிக்கப்பட்டது. ஆகிலும் ஆலோசனையின்றி யாதொன்றும் செய்யப்படவில்லை.

பிரஜாதிபத்திய அரசாட்சி நிலைத்திருந்த முப்பது வருடங்களிலும் அரசாட்சிமுறை உமறு றளியல்லாகு அன்கு அவர்களின் கருத்துப்படியே அவர்களின் சீவியகாலத்திலும் அவர்களுக்குப் பின்னும் இருந்தது. அவர்களுடைய அரசுமுறை அறபு தேசத்தை ஒன்றாய்த் திரட்டுவதும் அறபுக் கோத்திரத் தலைவர்களை யொரு சாதியாய்த் திரட்டுவதுமே. அன்னிய தேசங்களைப் பிடிப்பதைக் குறைக்கத் தேவைப்பட்டபொழுது அறபிகள் அன்னியதேசங்களில் குடியிருக்கையில் தங்கள் சாதியை இழந்துவிடாதிருக்கவும மறுதேச மனிதர்களோடு கலந்துவிடாதிருக்கவும் உமறு றளியல்லாகு அன்கு அவர்கள் விரும்புகின்றவர்களாயிருந்தார்கள். இன்னும் சிலகாலம் உமறு சீவித்திருந்தால் அவர்கள் தங்களின் குண வலிமையால் அறபிகளை ஒரேவிதமான சாதியாக்கிவிடுவார்களென்றும், அவ்வாறு செய்யப்பட்டிருப்பின் இஸ்லாத்துக்கு நஷ்டத்தை வருத்திய ஆபத்தான ஊர்ச்சண்டைகள் தடுக்கப்பட்டிருக்குமென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. அறபிகளுக்கிடையில் ஊர்ச்சண்டைகளுண்டுபட்டு அவர்கள் பல கூட்டங்களாய்ப் பிரிக்கப்படாதிருக்கில் அவர்கள் ஐரோப்பா தேசத்தைப் பிடித்திருப்பார்களென்று ஓர் நூலாசிரியர் கூறியிருக்கின்றார். உமறு றளியல்லாகு அன்கு அவர்களின் அரசியல் முறையின் சில பிரதான இலக்ஷணங்கள் விசேஷமாய்க் கவனிக்கத்தக்கவை. அவற்றுள் முதலாவது அறபு தேசத்திலிருந்து அன்னியர்களை யகற்றிவிட்டு அத்தேசத்தை அறபிகளுக்கு மாத்திரம் சொந்தப்படுத்தியது. இரண்டாவது பிரஜாதிபத்திய அரசாட்சி அதிகம் பரக்கவிடாது தடுத்துக் கொண்டது. ஒரு இராச்சியத்தின் பலமும் விர்த்தியும அதன் வேளாண்மைக்காரரின் செல்வத்தில் தங்கியிருக்கின்றதென்பதை உமறு அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆதலால் பிடிக்கப்பட்ட இடங்களில வேளாண்மை நிலங்களை விற்கக்கூடாதென்று கட்டளைபண்ணியிருந்தார்கள். அறபிகள் சுதேசிகளின் நிலங்களை யெடுத்துக்கொள்வதைத் தடுப்பதற்காய் அவர்கள் பிடிக்கப்பட்ட தேசங்களில் நிலங்கள் வாங்கக்கூடாதென்று கட்டளையிட்டார்கள். இவ்வாறு வேளாண்மைக்காரர்களும நிலக்காரர்களும் தங்களாட்சியை யிழக்காது காக்கப்பட்டார்கள். இச்சட்டங்களை யுண்டாக்கும பொழுது உமறு றளியல்லாகு அன்கு அவர்களின் மனதில் இன்னுமொரு கருத்திருந்தது. அதாவது அறபிகள் தாங்கள் பிடித்த தேசத்திலுள்ளவர்களோடு கலந்துவிடாமல் அவர்களுக்கிடையில் ஆளுகை செய்கின்றவர்களாய் இருத்தல வேண்டுமென்பதே. இவ்விதமான கருத்து மறு சாதிகளின் சரித்திரத்திலும காணப்படுகின்றது. ஆனல் உமறு அறபிகளுக்குக் கொடுத்த மேன்மையும் சிலாக்கியங்களும மற்றவர்களுக்கு அல்லாத்தட்டம்

படவில்லை. நிறம், சாதி முதலிய காரியங்கள் சமத்துவத்துக்குத் தடையா யிருக்கவில்லை. உமறின் காலத்தில் அறபி அல்லாத வொருவர் இஸ்லாமார்க்கத்தை யொப்புக்கொண்டவுடன் அல்லது அறபிக் கோத்திரத்தோடு சேர்ந்து விட்டவுடன் அறபியாய்ப்பிறந்த வொருவரின் தகுதிக்கு வுயர்ந்துவிட்டனர். இந்த அரசு முறை அவர்களுக்குப் பின் வந்த கலீபாககளின் காலத்திலும் நடத்தப்பட்டது. பல பெர்சிய குடும்பங்கள் தங்கள் வேதத்தை மாற்று அறபுக குடும்பங்களின் மவுலாக்களாகிவிட்டார்கள். அவ்வாறே சாமிலும் மிஸ்றிலும இருந்த பல கிறீஸ்துமத கோத்திரத்தவர்களும ஆப்பிரிக்காவின் பெர்பர் சாதியாரும அறபுக்கோத்திரங்களோடு சேர்க்கப்பட்டார்கள். ஆகிலும் இஸ்லாமார்க்கத்தை யனுசரித்தவர்களுக்கு விசேஷ சிலாக்கியங்களிருந்தன. இஸ்லாத்தின் சட்டங்களும் கற்பனைகளும குடியரசுக்கே சார்பாயிருக்கிறது. தனவான்களும் எளியவர்களு முள்பட எல்லா மனிதர்களும அல்லாகுத்தஆலா வுடைய சமுகத்தில் ஒரே சமமானவர்களா யிருக்கின்றார்கள். அரசாகள் மனிதர்களை பூர்க்கலகத்தை விட்டும் காக்கததறகாய் நியமிக்கப்பட்ட அல்லாவின் காரியகாரர்கள். இராச்சியத்தின் வருமானங்கள் அறவு பண்ணப்படுவது ஜனங்களின் நன்மைக்காகவே யன்றி கலீபாக்களின் சொந்தப் பிரயோசனத்துக்காகவல்ல. எளியவர்களின்வரி எளிய ஜனங்களைக் காப்பாற்றுதற்காய் வலியவர்களிடமிருந்து எடுக்கப்பட்டது. தருமம் ஓர் சட்டமாக்கப்பட்டது. ஆதலால் பிரஜாதிபத்தியத்தின் பூர்வநாட்களில் பொக்கிசசாலைககுக் காவலராவது கணக்குப் புத்தகங்களாவது தேவையா யிருக்கவில்லை. வரிப்பணங்கள் பைத்துமாலுக்குக் கொண்டுவரப்பட்ட வுடன் எளியவர்களுக்குக் கொடுக்கப்பட்டது அல்லது இராச்சியத்தைக் காத்துக்கொண்டிருந்த போர்வீரர்களுக்குக் கொடுக்கப்பட்டது. யுத்தத்தில் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களும் அவ்வாறே பங்கிடப்பட்டன. ஆனால் இந்தப் பொருட்களிலிருந்து இளையவர்க்கும் முதியவர்ககும ஆணுக்கும்பெண்ணுக்கும அடிமைக்கும் சுயாதீன முள்ளவர்க்கும் ஒரேவிதமாய்ப் பங்கு கொடுக்கப்பட்டது. ஆகிலும் பிற்காலத்தில் இந்தப்பங்குகளைப் பிரித்துக்கொடுக்க வியலாதிருந்ததால் அவற்றுக்கு பதல் திட்டமான தொகைகள் கொடுக்கப்பட்டன. எல்லோருக்கும் அரசாட்சியின் வருமானத்தால் சம்பளங்கொடுக்கவேண்டியதாய் வந்தது. முஸ்லிம்களுக்கு மாத்திரமல்ல முஸ்லிமல்லாத பிரஜைகளுக்கும் (ஸிம்மி) இராஜபக்திக்காயும் விசேஷ சேவகத்துக்காயும சம்பளங்கள் கொடுக்கப்பட்டன. கலீபாக்களுக்கு விசேஷமான சம்பளமிருக்கவில்லை. நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுடைய கருத்திற்கு அல்லது உமறு றளியல்லாகு அன்கு அவர்களுடைய கருத்திறகு நிலங்களைப் பிரித்து ஜனங்களுக்குக் கொடுப்பது நன்றெனத் தோன்றவில்லை. அவ்வாறு செய்தால் கடைசியில் சில குடும்பங்கள் தரித்திரத்திலாகிவிடும். ஆதலால் மதீனாவின் நிலங்கள உடபிரிமையும் பராதீனத்தையும் விட்டுக்காக்கப்பட்டன. மேலும் இக்நோக்கத்தோடேயே பிடிக்கப்பட்ட தேசங்களிலுள்ள பொது நிலங்களும போர்வீரர்களுக்குப்

பிரித்துக் கொடுக்கப்பட்டது. அரசாட்சியால் வைக்கப்பட்டு அவற்றின் வருமானங்களில் செலவு நீக்கி பாக்கியுள்ளது அதற்குரித்தாளர்களாயிருந்த ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டது.

ஆகிலும் உதுமான் றளியல்லாகு அன்கு அவர்களின் காலத்தில் உமறு றளியல்லாகு அன்கு அவர்களின் அரசு முறைகள் மாற்றப்பட்டன, அவர்கள் உமறால் நியமிக்கப்பட்டிருந்த சில தேசாதிபதிகளை யுத்தியோகங்களா லகற்றியதோடு, தம்மினத்தவர்களின் கேள்விக்கிசைந்து அவர்களுக் கவ்வுத்தியோகங்களைக் கொடுத்தார்கள். அரசாட்சியின் பொதுச்சொத்தாயிருந்த நிலங்கள் கலீபா அவர்களின் சுற்றத்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டன, இவ்வாறே முஆவியா அவர்கள் சாமிலும் மிஸோபெற்றேமியாவிலுமுள்ள பொது நிலங்களை யெடுத்துக் கொண்டார்கள். ஸவாத்து இன்னுமோர் இனத்தவருக்குக் கொடுக்கப்பட்டது. பைத்துமால் பணத்தையும் மாகாணத்தின் செல்வத்தையும் கொண்டு உமையாக் கோத்திரத்தார்கள் செல்வந்தரானார்கள். உதுமான் றளியல்லாகு அன்கு அவர்கள் முஸ்லிம்களல்லாதவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சிலாக்கியங்களை யகற்றிவிட்டுத் தமக்கு முன்னிருந்த கலீபாக்களுடைய சட்டங்களுக்கெதிரான வேறு கடினமான சட்டங்களை யியற்றினார்கள். நிலங்களை விற்பதற் கிடங்கொடுத்ததோடு இராணுவத்தார்களுக்கும நிலங்களைக் கொடுத்தார்கள். அலிறளியல்லாகு அன்கு அவர்களின் ஆளுகை கலகமுள்ளதாயிருந்தது. அதில் முந்தின துரைத்தனத்தின் தவறுகளைத்திருத்த தருணமுண்டாயிருக்கவில்லை. ஆகிலும் அவர்கள் தம்மாலென்றிய விடத்தில் குற்றஞ்செய்த தேசாதிபதிகளை யகற்றிவிட்டு உமறு அவர்களின் அரசுமுறையைத் திரும்ப ஸ்தாபித்தார்கள். மேலும் அலிறளியல்லாகு அன்கு அவர்கள் அரசாங்க வெழுத்துகளை வைத்தற்கு வோர்தானத்தை அமைத்ததோடு ஹாஜிப (பாராபத்தியன்,) சாஹிபுச்சாதா (காவற்சேனாதிபதி) என்ற வத்தியோகத்தர்களை நியமித்து பொலிஸ காவலையும் சீர்படுத்தி யதன் பணிவிடைகள் ஒழுங்காய் நடத்தப்படுதற்குச் சட்டங்களு மியற்றினார்கள்.

மக்கா பிடிக்கப்பட்டு அறபுத்தீபகற்பமும் கீழ்ப்படுத்தப் பட்டபொழுது றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் பிரதான பட்டணங்களிலும் மாகாணங்களிலும அமீர என்ற பட்டத்தோடு தேசாதிபதிகளை ஏற்படுத்தினார்கள். அந்தப்பட்டம உமறு அவர்களாலும தேசாதிபதிகளுக்குக் கொடுக்கப்பட்டது. உமறு றளியல்லாகு அன்கு அவர்களை காரியத்தில் இஸ்லாத்தின் துரைத்தனத்தை அமைத்தவர்களென்று சொல்லலாம். அவர்கள் பிடிக்கப்பட்ட இடங்களுட் சிலவற்றை யொன்றாய்ச் சேர்த்து அவற்றின் பலன்களை வெளிப்படுத்தற்குத் தமது தேசாதிபதிகளுக்குச் சாட்டினார்கள். அப்படியே அஹ்வாஸும பஹ்றைனும் ஒரு மாகாணமாய்ச் சேர்க்கப்பட்டன. ஸிஜிஸ்தானும மக்றானும் கர்மானும் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டன. தப்றிஸ்தானும குறாஸானும ஒன்றாயிருந்தன. தென்பெர்ஷியா மூன்று தேசாதிபதிகளுக்குக் கீழாக்கப்பட்டன. இறாக்கு இரண்டு தேசாதிபதிகளுக்குக் கீழிருந்தது. அவர்களுள் ஒருவர் கூபாவிலும மற்றவர் பஸ்றாவி

லும் இருந்தனர். சாமும் இவ்வாறே செய்யப்பட்டது. வடமாகாணங்களின் தேசாதிபதி தமது ஹெட்குவாட்டரை ஹெம்ஸில் நிறுத்தியிருந்தனர். தென்பாகத்தின் வாலி திமிஸ்கிலிருந்தனர். பலஸ்தீன் வேறோர் தேசாதிபதியின் கீழிருந்தது. ஆபிரிக்காவில் மூன்று தேசாதிபதிகளிருந்தார்கள். ஒருவர் மிஸ்றிலும், ஒருவர் மிஸ்றின் மேல்பாகத்திலும், மற்றவர் லீபியன் வனத்துக் கப்பாலுள்ள மாகாணங்களிலும் இருந்தார்கள். அறபுதேசம் ஐந்துமாகாணங்களாய்ப் பிரிக்கப்பட்டன. சிறு மாகாணங்களில் தேசாதிபதிகள் வாலிகள் அல்லது நாயிபுகள் என்று அழைக்கப் பட்டார்கள். பலவிடங்களில் தேசாதிபதியே தமது வுத்தியோகத்தின் அதிகாரத்தால் பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையை நடத்துகிறதோடு குத்பா ஓதுகின்றவராயுமிருந்தனர். பலஸ்தீன், திமிஸ்கு, ஹெம்ஸ், கினிஸறீன் ஆகிய விடங்களில் பகிரங்க தொழுகைகளை நடத்தவும் நீதிசெய்யவும் விசேஷ நியாயாதிபதிகளை உமறு றளியல்லாகு அன்கு நியமித்திருந்தார்கள். அரசாட்சியின் வருமானங்களைப் பெற்றுக் கொள்ளவும் அதனைச் செலவுசெய்யவும் ஓர் பகுதியை யுண்டாக்கி அதற்கு திவான் என்று பெயர் கொடுத்தார்கள். அரசாட்சியின் வருமானத்தால் முதலாவது ஒவ்வொரு மாகாணத்தின் துரைத்தனச் செலவுகளிடப் பட்டன. இரண்டாவது இராணுவச் செலவு கொடுக்கப்பட்டது. மீதியுள்ளது சாதியார்களுக்குக் கொடுக்கப்பட்டது. இந்தப் பங்குக்கு அறபுச் சாதியார்களும் அவர்களின் மவாலிகளும் உரித்துள்ளவர்களாயிருந்தார்கள். சம்பளத்துக் குரித்துள்ள சர்வ அறபிகளும் அறபிகளல்லாதவர்களுமான ஆண், பெண், சிறுவர் ஆகியவர்களின் நாமங்கள் பதியப்பட்டவோர் பதிவுப் புத்தகம் திவானில் வைக்கப்பட்டிருந்தது. தேசாதிபதியே மாகாணத்தின் இராணுவ அதிகாரியாயும் ஸிவில் அதிகாரியாயும் இருந்தாலும் பணவிஷய துரைத்தனவிஷய காரியங்களொவ்வொன்றை நடத்தவும் கீழுத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். பிடிக்கப்பட்ட தேசங்களுள் வேளாண்மைக்காரர்களின் நிலையைத் திறப்படுத்தும்படிக்கும் வியாபாரத்தை யதிகப்படுத்தும்படிக்குமே உத்தியோகத்தர்களுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது. இந்நோக்கத்தோடு மிசுர், சாம், இறாக்கு, தென்பெர்ஷியா ஆகியவிடங்கள் அளக்கப்பட்டு ஒரே தன்மையில் வரிநியமிக்கப்பட்டது. நில அளவையில் (ஸர்வே) நிலங்களின் பரப்புகளும், நிலத்தின் தன்மையும், விளைவின் தன்மையும், பாவிப்பவர்களின் தன்மையும் காட்டப்பட்டன. பேபிலோனியாவில் வாய்க்கால்கள் கட்டப்பட்டன. கொஸ்றாஸ் அரசர்களால் அசட்டை பண்ணப்பட்டிருந்த திஜ்லா, புறாத்து நதிகளின் அணைகள் விசேஷ வுத்தியோகத்தர்களின் மேல்பார்வையின் கீழ் வைக்கப்பட்டன. உமறு அவர்கள் தானிய வரியைக் குறைத்து வியாபாரத்துக்குத் துணைசெய்தார்கள். மிஸ்றுக்கும அறபியாவுக்கு மிடையில் வழிதிறப்பதற்காய் நீல் ஆற்றுக்கும் சிவப்புக் கடலுக்கும் மத்தியிலிருந்த பழைய வாய்க்காலைத் திரும்பத் தோண்டும்படி உமறு கட்டளை கொடுத்தனர். அதற்கு அறபிகள் அமீருல் மூமினீனின்

வாய்க்காலென்று பெயர்கொடுத்தார்கள். அது வொரு வருடத்துக்குள் முடிக்கப்பட்டது. நீல் ஆற்று வெள்ளங்கள் மிஸ்று விளைவுகளோடு யம்பூக்குக்கும ஜித்தாவுக்கும் பிரயாணமானபொழுது மக்காவிலும் மதீனாவிலும் தானியவிலை குறைந்து விட்டது.

கலீபாவால் நியமிக்கப்பட்டவர்களும் தேசாதிபதிகளை விட்டும் தன்னிஷ்டமானவர்களு மானவில்ல நியாயாதிபதிகளாலேயே நியாயவிஷயம் நடத்தப்பட்டது. இஸ்லாத்தில் உமறு றளியல்லாகு அன்கு அவர்களே நியாயாதிபதிகளுக்கு சம்பளம் நியமித்து அவர்களின் உத்தியோகத்தை துரைத்தன வுத்தியோகத்தை விட்டும் பிரித்த முந்தின அரசர். ஸாபித்தின் புதல்வர் ஸைது அவர்களே மதீனாவின் முந்தின சம்பளம்பெற்ற நியாயாதிபதி. காளிகளுக்கு ஹாக்கிம் என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. "நியாயாதிபதிகள் ஹாக்கிமுஷ்ஷர்று என்று அழைக்கப்படுகிறார்கள். ஹாக்கிம் சட்டத்தைக் கொண்டாளுகிறவர், சட்டம் நீதியைக் கொண்டாளுகிறது. நீதியின் உச்சாரத்தைத் தேசாதிபதிகள் நிறைவேற்றுகின்றார்கள். இவ்வாறே இஸ்லாமான அரசாட்சி அதன்பாலிய வயதில் துரைத்தன அதிகாரத்தையும் நியாய அதிகாரத்தையும் பிரித்துவைப்பதைப் பகிரங்கப்படுத்திற்று" என்று வொன் ஹமர் கூறியிருக்கின்றார். நியாயவிஷய ஆளுகை பூரணமானதாயிருந்தது. கலீபாக்கள் தாமும் நியாயாதிபதிகளின் தீர்ப்புகளுக்கு அமைந்தவர்களாயிருந்தார்கள். பூர்வத்தில் ஊர்க்காவல் வேலை ஊரவர்களால் நடத்தப்பட்டது. உமறு றளியல்லாகு அன்கு அவர்கள் இராக்காவலர்களை நியமித்தார்கள். ஆனால் அலி றளியல்லாகு அன்கு அவர்களுடைய காலம்வரையில் ஒழுங்கான பொலிஸ்காவல் உண்டாக்கப்படவில்லை. அலி அவர்களே சர்தா என்ற நாமத்தோடுவோர் நகர காவலை அமைத்து அதன் தலைவருக்கு சாஹிபுச்சர்தா என்ற பட்டத்தைச் சூட்டினார்கள். உமறு அவர்கள் ஹிஜறத்தின் காலாரம்பத்தை ஸ்தாபித்ததோடு இராச்சியத்தின் பல பாகங்களிலும் பாடசாலைகளையும் பள்ளிவாசல்களையும் அமைத்தார்கள்.

இன்னும் வரும்.

---

## வெற்றியுள்ள உதுமானியர்.

(தொடர்ச்சி.)

சுல்த்தான் உர்கான் அவர்கள் 1359 ம் ஆண்டு மவுத்தானார்கள். அவர்கள் ஆசியா மைனரின் எல்லைவரையில் சென்றார்கள். தமது குதிரை வால்கள் ஹலஸ்பொன்றின் மேற்குக்கரையில் பறக்கவும் கண்டார்கள். அவர்களுக்குப் பிறகு அவர்களின் மகன் முறாது (1வது) சுல்த்தானாய்வந்தார்கள். அவர்களின் மூத்த சகோதரர் சுலைமான் தம் தகப்பனுக்கு முன் இறந்துபோனதால் முறாதுக்கு ஸிம்காசனம் கிடைத்தது. இவர் டனூபு நதிவரையில் உதுமானிய சேனைகளை நடத்தினர்.

கிறீக்குகளைக் குறித்து "அவர்கள் மூன்று பாகமுள்ளவர்கள். அவர்களின் நாவுகள் ஒன்றைப் பேசுகின்றன. அவர்களின் மனம் வேறொன்றை சிந்திக்கிறது. அவர்களின் செய்கை அவை யொன்றோடும் இணங்குவதில்லை" என்று ஓர் வசைகவிகாரன் கூறியிருக்கின்றார். கிறீக்கு ராச்சியத்தை மாத்திரம் கீழ்ப்ப

டுத்த வேண்டியதாயிருந்தால் கன்ஸ்தந்திநோப்பல் பதினைலாம் நூற்றண்டில் பிடிக்கப் பட்டிருக்கும். 1361 ம் ஆண்டு அட்றியநோப்பலும், அதற்குக் கொஞ்சம் பின்பு பிலிப்பபோலிசும் முருதால் பிடிக்கப்பட்டன. மஸிடோனியா, திறேஸ் அல்லது தற்கால றூமேலியா உதுமானிய மாகாணங்க ளாக்கப்பட்டன. றகூஸாவின் பிரஜாதிபத்திய அரசாட்சி 1365 ம் ஆண்டு உதுமானியர்களோடு வோர் வர்த்தக வுடம்படிக்கை முடித்துக்கொண்டது. அதைக்கொண்டு மேற்படி அரசாட்சி உதுமானியரின் பாதுகாப்பைப் பெற்றுக்கொண்டது. அந்த வுடம்படிக்கையில் முருது கையெழுத்திடும் பொழுது எழுதுகோல (பேனை) இல்லாத நிமித்தம் தங்களின் திறந்த கையில் மையைப்பூசி அதனை முத்திரை வைப்பதுபோல் கடிதத்தில் பதித்தார்கள். இந்தக் கையெழுத்தே இக்காலத்தில வளங்குகின்றதும் நாணயங்களிலும் துறுக்கியரின் அரசாங்க வெழுத்துகளிலும் காணப்படுகிறதுமான துகுறு அல்லது சுல்த்தானின் குறிப்பெழுத்தின் பூர்வமென்று நம்பப்படுகின்றது.

அழிந்து போகின்றவைளாயிருந்த சிறு அரசாட்சிகளைத் தவிர சுல்ததான் கவனிக்கத்தக்க வேறு சத்துருக்களிருந்தார்கள். ஆசியாவில் பின்பக்கத்திலிருந்த ஆபதகைவிட பால்கன் மலைக்கப்பால்ஆண்மைகெட்ட கிறீக்குகளுக்கு வித்தியாசமான யுத்தப் பிரியமுள்ள சாதியார்கள் வசித்தார்கள். கிறீக்கு இராச்சியத்துககப்பால் ஸொபியாவினதும் பொஸ்னியாவினதும் வலேவானிக்கு சாதியார்களும், பல்கேரியர், வலாச்சியர், அல்பேனியர், ஹங்கேரித் தேசத்து மாக்கியர் ஆகியவர்களுமே மூன்னூறு வருடங்களாய் முஸ்லிம் படை யெழுச்சியைத்தடுத்துக் கொண்டும் கிறீஸ்தவரின் இராச்சியத்தைக்காத்துக்கொண்டும் இருந்தார்கள். 1364 ம் ஆண்டு வடதேச கிறீஸ்தவர்களுக்கும் அவர்களின் தேசத்துக்குப் படையெடுத்துச் சென்ற துறுக்கியருக்கும் இடையில் அட்றியநோப்பலுக்குச் சமீபமாய் மரிட்ஸா ஆற்றோரத்தில் யுத்தமுண்டுபட்டது. ஐரோப்பாவில் உதுமானியரின் ஆளுகையை ஒரே முறையில் அழித்துவிடுவதற்காய் மேற்படி தலத்துக்கு ஹன்கரி இனதும் போலாண்டினதும் அரசரான முதலாவது லுயிசும் பொஸ்னியா, ஸெர்பியா, தேசங்களின் இளவரசர்களும் வந்தார்கள். முருதின் சேனதிபதியான லால ஷாஹின் என்பவர் கிறீஸ்தவர்களின் தொகையில் அரைவாசிக்கதிகமான போர்வீரர்களை யுத்தகளத்துக்குக் கொண்டுவரக் கூடியவரா யிருக்கவில்லை. ஆகிலும் கிறீஸ்தவர்கள் நன்றாய்க் குடித்துவிட்டு வெறியாட்டத்திலிருந்ததால் அவர்களை மேற்படிசேனதிபதி இரவில் தாக்கினர். தாக்கப்பட்டபொழுது உறங்கிக்கொண்டிருந்த ஹங்கேரிய போர்வீரர்கள் துறுக்கிய இரணபேரிகையடித்த சத்தத்தாலும் வாத்தியத்தாலும் சடுதியாய் எழுப்பப்பட்டார்கள். அவர்கள் ஆயுதங்களை யெடுக்குமுன் அவர்கள்மீது உதுமானியர்கள் விழுந்தார்கள். "அவர்கள் படுக்கையிலிருந்து அச்சங்கொண்டோடும் காட்டுமிருகங்களைப்போல் யுத்தகளத்தி லிருந்து விரண்டோடி மரிற்ஸா ஆற்றில குதித்துத் தாழ்ந்தார்கள்" என்று துறுக்கிய சரித்திரக்காரர் ஸஆதுத்தீன் கூறுகின்றார். அக்

தவிடம் இதுகாறும் "ஸெர்பு ஸிந்துகி" (ஸெர்பியரின் தோல்வி) என்று அழைக்கப்படுகின்றது.

இப்பொழுது துருக்கியர் தங்கள் சத்துருக்களை ஜயித்ததைக்கொண்டு திருத்தியடைந்தார்கள். ஆகிலும் நீண்டகாலஞ்செல்லுமுன் தங்களுடைய சத்துருக்களின் தேசங்களுக்குப் படையெடுத்துச் செல்லத் தீர்மானித்தார்கள். அப்பொழுது உதுமானியர்களிடம் தற்கால துருக்கி இராச்சியத்திற் காற்பங்குக்கும் குறைவாயிருந்தது. இப்பொழுது அல்பேனியாவை அகற்றிவிட்டு கிழக்கிலும் ஐரோப்பாவிலுமுள்ள துருக்கிய இராச்சியத்தை ஸென் ஜோர்ஜின் சிலுவையுள்ள வேர் கொடிக் கொப்பிடலாம். கிழக்கிலிருந்து மேற்கு ஹீமுஸ் அல்லது பால்கன் மலைத்தொடரிருக்கின்றது. அம்மலைத்தொடர் மேற்படி இராச்சியத்தை இருபாகங்களாய்ப் பிரிக்கின்றது. வடக்கேயும் தெற்கேயும் செல்லுகின்ற அம்மலையின் இரு கரங்களும் சிலுவையைப் பூரணப்படுத்துகின்றன. இரு மேற்பாகங்களுள் மேறகுப பக்கத்திலுள்ளது மேல் மோஸியா என்று முற்காலத்தில் அழைக்கப்பட்டது. அதுவே ஸெர்பிய பொஸ்னிய இராச்சியங்களாயிற்று. கிழக்குப் பக்கத்தில கீழ்மோஸியா அல்லது பல்கேரியா இருந்தது. இரு கீழ்ப்பாகங்கள் திரேசும் மஸிடோனியாவுமே. இவையிரண்டுமே றூமேலியா என்று அழைக்கப் பட்டன. இந்நான்கு பாகங்களிலும் இப்பொழுது நாம் குறித்துப் பேசுகிற காலம் வரையில் உதுமானியர் தென்கிழக்குப் பாகத்தை அல்லது திறேஸை பிடித்திருந்தார்கள், அது முழுதும், கன்ஸதந்தி நோப்பிலைச் சுற்றியுள்ள தேசத்தைத்தவிர, உதுமானிய ஆளுகைக்குக் கீழ்ப்பட்டிருந்தது. ஆகிலும் 1373ம் ஆண்டு கவாலா, ஸெரஸ் முதலிய விடங்களை உதுமானியர் பிடித்தோடு மஸிடோனியாவின் பெரும்பாகம் அவர்களின் கீழானது. அப்பொழுது அவர்களின் எல்லை றூமேலியாவை அல்பேனியாவை விட்டும் பிரிக்கின்ற மலைத்தொடர் வரையில் நீண்டுவிட்டது. சதுரங்கத்தில் காவில் இருபங்குகள் கீழ்ப்படுத்தப்பட்டிருந்தன. பாக்கியுள்ளதையும் கீழ்ப்படுத்தற்கு உதுமானிய சேனைகள் 1375ம் ஆண்டு முன்னேறின. பாலகனைக்கடந்து பெரிய கொன்ஸ்தந்தைன் இராஜா பிறந்த தலமும் பய்ஸன்றைன் இராச்சியத்தின் பலத்த கோட்டைகளிலொன்றுமான நிஸஸா பட்டணத்தைப் பிடித்துக்கொண்டன. இருபத்தைந்து நாள் முற்றுகையிட்ட பின்பு மேற்படி பட்டணம் தன்னைத்தானே யொப்புக்கொடுத்தது. தமது இராச்சியத்தின் மத்தியில் தாக்கப்பட்ட ஸெர்விய அரசர் உதுமானியருக்கு வருடாந்தம் ஆயிரம் பவுண் வெள்ளியும உதுமானிய சேனைக்கு ஆயிரம் குதிரை வீரர்களையும் கொடுக்கப் பொருந்திச் சமாதானம பெற்றுக்கொண்டனர். பல்கேரிய அரசர் தம்மை உதுமானியர் ஜயிக்கும வரையில் பார்த்திராது, அவர்களின கருணையைத் தாழ்மையோடு வேண்டிக்கொண்டனர். ஆகிலும் அவர் திறைகொடுக்காமல் தாம் தெரிந்துகொண்டபடி தமது மகளைக் கொடுத்து சமாதானத்தைப் பெற்றுக் கொண்டனர். அவ்வாறே இரு வடபாகங்களுள் பெருமபாகம சுல்த்தானுக்குக் கீழ்ப்படுத்தப் பட்டது. உதுமானிய

ரைத் தடுக்கக்கூடாதென்று கண்டு போப்பினதும் கத்தோலிக்கு அரசர்களினதும் உதவியைப்பெற்றுக்கொள்ள வீணில் நாடி கத்தோலிக்க மதத்திற் சேர்ந்த கிறீக்குச் சக்கரவர்த்தி கடைசியாய் சுலத்தான் முறுதின் அடிமையாகிவிட்டனர்.

அதே காலத்தில் இன்னுமொரு தேசம் ஆசியாவில உதுமானிய விராச்சியத்தோடு சமாதானமாய்ச் சேர்க்கப்பட்டது. அக்காலத்தில தமது இராச்சியத்தில் சமாதானமுண்டாயிருந்ததால் சுல்த்தான் அவர்கள் தமமுடைய புதல்வர் பாயஸீதுக்கு சல்ஜூக்கு இராசசியத்திலிருந்துண்டான பத்துத் தேசஙகளுலொன்றான கர்மியானின் இளவரசின் புதல்வியை விவாக முடித்து வைத்தற்கு ஆயத்தப்படுத்தினார்கள். மணவாளி தனது பிதாவின் தேசத்தில் பெரும் பாகத்தை துறுககிய இளவரசருக்குச் சீதனமாய்க கொண்டுவந்ததால் கர்மியன் மாகாணம் அகன்பிரதான பட்டணங்களுடன் உதுமானிய விராசசியத்தோடு சேர்க்கபபட்டது. விவாகம் புறாஸாவில் மிக்க டம்பத்தோடு நடத்தப் பட்டது. பத்துத் தேசங்களுள் மீதமுள்ளவைகளிலிருந்தும, அய்தின், கஸ்திமூனி, மந்திஷா, கலமான் முதலிய விடங்களின் அதிகாரிகளிட மிருந்தும் தானுபதிகள் வந்தார்கள். மிஸ்று சுலத்தானிடமிருந்தும் தானுபதிகள் வந்தனர். அவர்கள் அறபுக் குதிரைகளையும், கிறீக்கு அடிமைப் பெண்களையும் அலக்ஸாந்திரியாவின் அதிஜயமான பட்டுகளையும் வெகுமதிகளாய்க் கொண்டு வந்தார்கள். பொன் நாணயங்களைக் கொண்டு நிரப்பப்பட்ட பொன் தட்டங்களும், வெள்ளி நாணயங்களுள்ள வெள்ளித் தட்டங்களும், இரத்தினங்கள் பதக்கப்பட்ட கோபபைகளும் பாத்திரங்களும் வெகுமதிகளுள் இருந்தன. ஆகிலும அவறறை சுலத்தான் அவர்கள் தம்முடைய விருந்தாளர்களுக்குக் கொடுத்து விட்டார்கள். கொமியானி லுள்ள கோட்டைக



சுல்த்தான் முறுது கான்.
(3 வது உதுமானிய அரசர்.)

னின் சாவிகளை மாத்திரம் சுல்த்தான் அவர்கள் மணவாவியிடமிருந்து எடுத்துக்கொண்டார்கள். அவற்றை அவர்கள் திரும்பக் கொடுக்கவில்லை. ஹாமிது என்ற தேசத்தை அதன் பட்டணங்களான அக்ஷர், பெக்ஷஹ்ரி முதலியவைகளோடு அதன் அரசனிடமிருந்து சுல்த்தான் முராது வாங்கிக் கொண்டதால் மேற்படி பத்து ஸல்ஜூக்குத் தேசங்களுள் நான்கு அவரின் ஆளுகைக்குக் கீழ்ப்பட்டன. சுல்த்தானோனி, கருஸி, கர்மியான், ஹமீது ஆகியவை உதுமானிய இராச்சியத்தின் பாகமாயிருந்தன. பத்து வருடங்களின் பின் பாயெஸீது பாக்கியுள்ள தேசங்களைப் பிடித்து ஸல்ஜூக்குகளின் இராசியம் முழுமையையும் கீழ்ப்படுத்திக் கொண்டனர்.

கிறிஸ்தவர்களுளிருந்து ஜனிஸ்ஸரி பட்டாளத்துக்குப் பிள்ளைகள் வருடாந்தம் எடுக்கப்படுவது வடபாகத்திலிருந்த கிறிஸ்தவர்களான இளவரசர்களின் கோபத்தைக் கிளப்பிவிட்டது. துருக்கியர் டனூபு நதிவரையில் சென்றுவிட்டாலும் அவர்களின் விஸ்தாரமான இராச்சியம் கலகத்தை விட்டும் ஒழிந்திருக்கவில்லை. ஸிலேவ் சாதியார் இன்னும் கீழ்ப்படவில்லை. அவர்கள் திரும்பவும் ஐரோப்பாவிலிருந்து தங்கள் சத்துருவைத் துரத்துதற்குத் தெண்டிக்கத் தீர்மானித்தார்கள். இந்த வேதச்சண்டைக்கு ஸெர்பியா, பொஸ்னியா, பல்கேரியா ஆகிய தேசங்கள் முன்வந்தன. அவற்றோடு அல்பேனியா, வலாச்சியா, ஹங்கேரி ஆகிய தேசங்கள் சேர்ந்தன. போலாண்டும துணைச்சேனை யனுப்பிற்று. ஐரோப்பாவிலிருந்த மறுதேசங்கள் தம் சொந்தக் காரியங்களுள் ஆழ்ந்திருந்தனவாதலாலும், தங்களின் கீழ்மையான அரசர்களுக்கு இரையாகி விட்டனவாதலாலும் அவை பால்கன் தீபகற்பத்தில் நடக்கின்ற வைகளாயிருந்த காரியங்களைக் கவனித்தற்குக் கூடியவைகளாயிருக்கவில்லை. சம்பந்தப்பட்ட தேசங்கள் ஒரு பெருஞ்சேனையைத் திரட்டி முதல் முறை ஜயமடைந்தன. அவைகளின் சேனை 1388 ம் ஆண்டு பொஸ்னியாவிலிருந்த உதுமானிய சேனைமீது விழுந்து அதிலிருந்த இருபதினாயிரம் ஜனங்களுள் நாலில் மூன்று பங்குப் பேர்களைச் சங்காரஞ் செய்திறறு. இந்த நிந்தையை சகித்துக் கொண்டிருக்க முராது சம்மதமுடையவராயிருக்கவில்லை. அவர்களின் சேனாதிபதியான அலிபாஷா பால்கனை டர்பன் கணவாயால் கடந்து சும்லாவில் இறங்கி திர்னோவாவைப் பிடித்துக்கொண்டு பல்கேரிய அரசரான ஸிஸ்வான் தம்முன் முழந்தாட்படியிடச் செய்தனர். நிக்கொபோலிஸில் வளைப்புப்பட்டிருந்த அவ்வரசர் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்ததோடு பல்கேரியா உதுமானிய இராச்சியத்தோடு சேர்க்கப்பட்டது. இப்பொழுது டனூபு நதி அந்த இராச்சியத்தின் வட எல்லையாகிவிட்டது.

ஸெர்பிய அதிகாரியான லஸாரஸ் என்பவர் தமது பல்கேரிய படைத்துணைவரை யிழந்தும் கலங்கவில்லை. அவர் முராதை யுத்தத்திற் கழைத்தனர். இருசேனைகளும் கொஸோவோ வெளியில் ஸினிற்ஸா ஆற்றோரத்தில் 1389 ம் ஆண்டு சந்தித்தன. ஆற்றின் வடபாகத்தில் ஸெர்பியர், பொஸ்னியர், ஸ்கிபிற்றியர், போலியர், மாகியர் ஆகியவர்கள் திரட்டப்பட்டார்கள். தென்பாகத்தில்

உதுமானியர் சுல்த்தான் முறாதின்கீழிருந்தார்கள். இவர்களுக்குத் துணையாய் முறாதுக்கு ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் கீழ்ப்பட்டிருந்த அரசர்களும் அவரோடு நேசமாயிருந்தவர்களும், வந்திருந்தார்கள்: யுத்தத்துக்கு முந்தின இரவை சுல்த்தான் தொழுகையிலே கழித்து அல்லாகுத்தஆலாவிடம் உதவியையும் சுகதாவின் மவுத்தையும் கேட்டுநின்றார்கள். ஏனென்றால் அவர்கள் உண்மையுள்ள முஸ்லிம்களைப்போல் காபிர்களோடு செய்யும் யுத்தத்தில் மரணிக்கும் மகிமையை விரும்பினவர்களாயிருந்தார்கள். அவர்களின் பிரார்த்தனைக்குத்தரமாய் அடுத்தநாள் காலையில் மழை பெய்திட்டு. அந்த மழை துறுக்கியபோர்வீரர்களின் முகங்களில் அடித்துக் கொண்டிருந்த தூசியை யடக்கிற்று. வானம் தெளிவானவுடன் இருசேனைகளும் முன்னே வந்து யுத்தத்துக்காய் நிறுத்தப்பட்டன. கிறிஸ்தவர்களின் சேனையின் மத்தியில் லஸாறஸ் அதிபதியாய் இருந்தனர். வலதணியில் வக்பிறன்தோவிச்சும் இடதணியில் பொஸ்னியா இராசாவான தர்கோவும் இருந்தார்கள். துறுக்கியரின் பகுதியில் மத்தியில் முறாதும், அவரின் மக்களான பாயெஸீதும யாககூபும் வலதணியிலும் இடதணியிலும் இருந்தார்கள். ஹைறதர் என்பவர் அவரின் பீரங்கிப்படையை பிரதான சேனையின் பின்னே மலைச்சிகரத்தின் பக்கத்தில் வைத்திருந்தார். யுத்தம் நீளமானதாயும் பிடிவாதமுள்ளதாயும் இருந்தது. ஒரு பொழுது துறுக்கியரின் இடதணி யசைந்தது. ஆகிலும் பாயெஸீதின் மோதுகையால் அந்த அணிக்கு நம்பிக்கையுண்டுபட்டது. அவரின் துரிதத்திற்காய் அவருக்கு யில்தரிம் (இடி) என்ற பெயர் கொடுக்கப்பட்டது. அவர் வலிமையுள்ள இரும்புக்கோலொன்றைச் சுழற்றிக்கொண்டு சத்துருக்களின் அணிக்கூடாய்ச் சென்று தமது வழியில் குறுக்கிட்டவர்களை விழுத்தினர். அவர் எந்தமட்டு அகோரத்தோடு யுத்தத்தைப் புதுப்பித்தாராயின் முன் இடதணியில் தைரியவீனப்பட்டோடிய துறுக்கியர் திரும்பவும் தங்கள் சத்துருக்களைத் தாக்கத் துணிந்தார்கள். தங்களுக்கு ஜயமுண்டான தென்றெண்ணிய கிறிஸ்தவர்கள் . அப்பொழுதே வேர் பெரும் யுதத்தைத் துவங்குகின்றவர்களாயிருந்தார்கள். அந்தக்கொடிய யுத்தத்தில் ஆயிரக்கணக்கான பேர்கள் இருபகுதிகளிலும் விழுந்தார்கள். யுத்தாயுதங்களின் பிரகாசம் மின்னைப்போல ஒலித்துக் கொண்டிருந்தது. ஈட்டிகளின் நிரளும் மற்றும் குதிரைவீரர்களின் ஆயுதங்களும் சூரியனின் வெளிச்சத்தை மறைத்துக்கொண்டன. அம்புகளும் அஸ்திரங்களும் எந்தமட்டுத் தீவிரமாய் விழுந்தனவேயாயின் அவை வானத்திலிருந்து கொட்டப்பட்டன வென்று மனிதர்கள் நினைக்க லானார்கள். யுத்தாயுதங்களின் சத்தமும் குதிரைகளின் கனைப்பும் கூக்குரலும் எந்தமட்டுப் பயங்கரமானவைகளாயும அதிகமாயும் இருந்தனவேயாயின் மலைகளில் சஞ்சரித்த மிருகங்கள் அதிஜயத்தோடிருந்தன. துறுக்கிய சரித்திரகாரன் அந்நாளின் பயங்கரத்தை வெளிப்படுத்தற்காய் மேற்படி திடுக்காட்டமான சத்தம் தேவதூதர்களைத்தாமும் அதிஜயப்படுத்தி அவர்கள் தங்களின் தேவஸ்தோத்திரங்களை மறக்கச்செய்தனவென்று கூறியிருக்கின்றார்க

ன். பகல் நேரமான பொழுது துருக்கியர் ஜயமடைய கிறிஸ்தவர்கள் பின்வாங்கத் துவங்கினார்கள். கடைசியாய் கிறீஸ்தவர்களை சாதாரண யுத்தம் கொடுக்கவே அவர்களைத் துருக்கியர் தங்களின் முழுச்சேனையோடு பின்பற்றிக் கணக்கின்றியும் இரக்கமின்றியும் சங்காரஞ் செய்தார்கள். யுத்தகளத்தில் வெட்டப்பட்ட செம்மைகொண்ட தலைகளும் உருளுகின்ற தலைப்பாகைகளும நிறைந்திருந்தன வென்று துருக்கிய சரித்திரகாரர்கள் கூறுகின்றார்கள்.

ஆகிலும துருக்கியருக்குப் பெருஞ் சேதமொன் றுண்டாகாமல யுததம் முடியவில்லை. மிலோச் கொபிலோவிச் என்றவோர் ஸெர்பியவீரன் சுலத்தான் அவர்களுக்கு இரகசியமாய்ப் பிரதான செய்திகளை யறிவிக்கிற சாட்டோடு சுல்த்தான் அவர்களின் சன்னிதானத்துக்குச் சென்று, தான் சுல்த்தான் அவர்களின் முன் கொண்டு வரப்பட்ட பொழுது தனது குத்துவாளால் சுல்ததான் முராது அவர்களைக் குத்திவிட்டனன். சமீபத்திலிருந்த காவற்காரன் மேற்படி கொலைபாதகனைத் துண்டுகளாய்க் கொத்திவிட்டனன். ஆகிலும் அக்கொலைபாதகன் செயத வேலை சித்தியானது. தமது சேமப்படையைக் கொண்டு சத்துருக்களைத் தாக்கும்படி கட்டளை கொடுத்துவிட்டு முராது அவர்கள் தமது கூடாரததில் மவுததானார்கள். சேமபபடையின் தாக்கோடு துருக்கியரின் வெற்றி பூரணமாயிற்று. அத்தருணததில் ஸெர்பிய அரசர் லஸாறஸ் மறியற்காரனாய்த் துருக்கியரால பிடிககப் பட்டிருந்தார். அவனைக் கொன்றுபோடும்படி சுல்ததான் அவர்கள் மரணிக்கும் பொழுதே கட்டளை கொடுததுவிட்டார்கள். மிலோச் கொபிலோவிச் தான் செய்த கபடமுள்ள கொலைக்காய் அழுதல் ஓர் வீரனாய்க் கவனிக்கப்படுகின்றான். பழைய காலத்தில் கிறீஸில் ஹாமோடியஸ், அறிஸ்டொகிற்றன் ஆகியவர்களுக்கு நடந்ததுபோலும், தற்காலத்தில் பிருன்ஸில் சார்லட்டி கொர்டேக்கு நடந்ததுபோலும் இரண்டகததின் துர்க்கீர்த்தியை யதன்முடிவின் பலனுககாய் மன்னித்துவிட்டார்கள். இவ்வாறே ஓர் கொலைபாதகன் ஓர் வீரனாகி விட்டான்.

இந்த இடையூறுக்காகவே சுல்த்தான் அவர்களின் சமுகத்துக்கு வருகிற அன்னியரின் இரு கரஙகளையும் அரசரின் தோழர்களிருவர் பிடித்துக்கொள்ளல் வேண்டுமென்று சட்டம் இயற்றப்பட்டது. இக்காலத்தில அச்சட்டம பிடிவாதத்தோடு நடத்தப்படாதிருந்தாலும் இந்த நூற்றுண்டிற்றுனும் சுல்த்தான் அவர்களை யதிகமாய்ச சமீபித்தற்கு அன்னிய தானாதிபதிகளுக்கு இடங்கொடுக்கப்படவில்லை. கொல்லஸ் என்பவர் மேற்படி சுல்த்தானைப் பற்றிச் சொல்லுகிறதாவது:—

“இக்முராது பக்தியில் மற்றும் துருக்கிய அரசர்களைப் பார்க்கிலும் அதிக ஊக்கமுள்ளவர். பெருந் தைரியமுள்ள மனிதன். தமது சர்வ முயற்சிகளிலும அதிஷ்டமடைந்தனர். அவர் தமது தகப்பனையும் பாட்டனையும பார்க்கிலும அதிகமாய்த் தமது சத்துருக்களைச் சங்காரஞ் செய்திருக்கின்றார். அவர் ஆசியாவிலிருந்த தமது இராச்சியத்தை வாளைக்கொண்டும் விவாகத்தைக்கொண்டும் பணங்கொடுத்து வாங்கியும் பெருப்பித்தனர். கிறீககு இளவரசரின் பிணக்கையும் அச்சத்தையும் தமது நயத்துக்குபயோ

கிறது ஆர்மேனியா என்று அழைக்கப்பட்ட திரேசியாவின் பெரும்பாகத்தையும் அதற்கயலிலிருந்த இடங்களையும், கன்ஸ்தந்திநோப்பலின் சக்கிரவர்த்திக்கு திரேசியாவின் இராசதானியையும் வேறு சொற்ப இடத்தையும் இராச்சியமில்லாமல் சக்கிரவர்த்தியென்ற வெறும் நாமத்தையும் கொடுத்துவிட்டு, கீழ்ப்படுத்திக்கொண்டார். அவர் பல்கேரியாவில் ஓர் பெரும் பாகத்தைப் பிடித்துக்கொண்டு செர்பியாவுக்கும், பொஸ்னியாவுக்கும், மஸிடோனியாவுக்கும் சென்றனர். கடினமானவராயிருந்தாலும் தாராளமானவராயுமிருந்தனர். தமது பிரஜைகளால் உவக்கவும் அஞ்சவும் பட்டனர். அவர் கொஞ்சம் பேசுகிறவர். வேஷங்காட்டுவதில் ஆழமானவர். அவர் கொல்லப்பட்ட பொழுது 68 வயதுள்ளவராகவும் 31 வருடம் ஆளுகைசெய்தவராயும் இருந்தனர். அவரின் சரீரத்தை பாயஸீது ஆசியாவுக்குக் கொண்டுபோய் புரூஸாவில் ஓர் அழகான பள்ளியில் இராசரீக மரியாதைகளோடு அடக்கம்பண்ணினர். அங்கு அவருடைய கபுறுக்குமேல் அவருடைய மேலங்கியும் தலைப்பாகையும் இருக்கின்றன. கபுறுக்குச் சமீபத்தில் மூன்று சட்டிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் மேல் நுனியில் மூன்று குதிரைவால்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றை யவர் தமது யுத்தங்களில் கொடிகளாய்ப் பாவித்தனர்" என்றதே.

கொஸோவோ வெளியில் மிலோச் கொபொலோவிச் தன்னைத்தாக்கிய துருக்கிய காவலைவிட்டும் மூன்றுமுறை தன்னை மீட்சிசெய்த தானங்களைக் காட்டுதற்கு மூன்று கல்லுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. சுல்தான் மூறாது விழுந்தவிடத்தில் ஓர் ஆலயம் கட்டப்பட்டிருக்கின்றது.

(இன்னும் வரும்.)

---

# இலங்கை முஸ்லிம்களின் சீர்திருத்தம்.

### அறிவோ அறிவீனமோ யெது நாம் கொள்ளத்தக்கது.

:0:

2 வது.

யாம் மேற்படி மகுடத்தைப் பெற்ற முதலாவது செய்தியை யெழுதியபொழுது எமது கருத்துகள் எமது நண்பர்களின் கருத்துகளோடு முட்டிக்கொள்ளுமென்ற நம்பிக்கை யெமக்கிருந்தாலும், அந்தச்செய்தி இவ்வளவு சுறுக்கில் கவனிக்கப்படுமென்று யாம் எண்ணியிருக்கவில்லை. எமது கருத்துகளில் குற்றம் காண்பவர்கள் இப்பொழுது பலரிருந்தாலும யாம் எழுதியவற்றை யெமது நண்பர்கள் வாசித்துச் சீர்தூக்கத் துணிந்தது எமக்கு மிக்க ஆநந்தத்தைத் தருகின்றது. இப்பொழுது அவர்களுக்குக் குற்றமானவைகளாய்த் தோன்றுகிற எமது கருத்துகள் சமீபகாலத்தில் சுத்தமானவைகளாய் அவர்களுக்கே தோன்றுமென்ற நம்பிக்கை யெமக்கிருப்பதால் யாம் எழுதுவதை கவனமாய் வாசித்துச் சிந்திக்கும்படி எமது நண்பர்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

எமது சென்ற பத்திரிகை வெளிபட்டுச் சிலதினங்களுக்குப் பின்பு எம்மை யொரு நண்பர் மறுதானைப் பள்ளிவாசலில் சந்தித்து நீங்கள் இலங்கை முஸ்லிம்களின் சீர்திருத்தத்தைப்பற்றி யெழுதியிருக்கின்ற செய்திக்காய்

நான் உங்களுக்கு சோபனங் கூறவேண்டியதா யிருக்கிறது. இவ்விதமான பல செய்திகள் எழுதப்படவேண்டும். எங்களின் தேர்ச்சியைத் தடுக்கின்ற வழக்கங்களிலுள்ள குற்றங்களை யெடுத்துக்காட்டுகிறது இக்காலத்தில் மெத்த ஆவசியகமான காரியமாயிருக்கிறது. என்னோடு பேசியவர்கள் தங்கள் கருததுகளை வியந்துகொள்ளுகிறார்கள் என்று கூறினர். இன்னுமோர் கனமுள்ள நேசர் லாஹூர்ப் பாடசாலையில் எம்மைச் சந்தித்து யான் உங்களுக்கோர் புத்திசொல்ல வேண்டியதாயிருக்கிறது. நீங்கள் கந்தூரியைப்பற்றி யெழுதியிருக்கிற செய்தி சரியானதே, ஆகிலும் அதை விளங்கிக்கொள்ளுகிற மனிதர்களில்லை. இக்கருமத்தைச்சொல்லுதற்கு இன்னும் காலம் வரவில்லை. மனிதர்களுக்குக் கோபமுண்டாகாத தன்மையில் சொல்லவேண்டும். அப்பால் உங்கள் சித்தம் என்று சொன்னார்கள். இன்னுமொரு தோழர் சோனகர் ஐக்கிய சங்கத்தில என்னைச் சந்தித்து உங்களின் கந்தூரியைப்பற்றிய செய்தியைக் குறித்து இருவர் என்னிடம் விசாரிததார்கள். அவாகளுள் ஒருவர் தாங்கள் எழுதியிருககின்றது மெத்தக் கடினமென்றும் மனிதர்கள் பொறுக்கமாட்டார்களென்றும, மற்றவர் நாங்கள் எப்பொழுதும் குறுமா, பிர்யானி தின்றுகொள்ளக்கூடியவர்களென்றும் தாம் வருடத்துககொருமுறை . . . . . ஆசியார் அவர்களுடைய கந்தூரிக்குப் போனபொழுதே அவற்றைத் தின்று சுக்குர்செய்து ஆசியார் அவர்களுக்கு பறக்கத்துண்டாகும்படி துஆச் செய்வதாகவும் கூறினார்களென்று தெரிவித்தனர். வேறோர் நேசர் நெடுங்தெருவில் தமது சாப்பில் எம்மைச் சந்தித்து கந்தூரியைப்பற்றி நீங்கள் எழுதியிருப்பதை நான் வாசித்தேன். உங்களுடைய கருத்து வுன்னதமானதென்று எனக்குத் தோன்றுகிறது. ஆகிலும் சிலர் உங்கள் கருத்துகளைத் தவறாய் விளங்கிக்கொண்டு உங்களைக் குற்றப்படுத்திப் பேசுகின்றார்கள். அதைக்கேட்பது உங்கள் நண்பர்களான எங்களுக்குத் துக்கமா யிருக்கின்றது என்று மொழிந்தனர். இன்னுமொரு நேசர் என்னைத் தமது அச்சியந்திரசாலையில் கண்டு உங்களின் கந்தூரியைப்பற்றிய செய்தியைக் குறித்துச்சிலர் என்னோடு பேசியிருக்கின்றார்கள். அவர்களி லொருவர் நீங்கள் வஹ்ஹாபியாகி விட்டீர்களென்று கோபமாய்க் கூறினரென்று தெரிவித்தனர். இன்னுமொரு மித்திரர் எனதுவீட்டில் என்னைச் சந்தித்து முஸ்லிம் பாதுகாவலனில் கந்தூரியைப்பற்றி எழுதபபட்டிருப்பதைக் குறித்து வொருவர் என்னோடு தர்க்கித்துப் பேசினார். உங்களுடைய பேச்சில் அதிக குற்ற மிருக்கிறதென்றும் நீஙகள் அவ்வாறு எழுதியிருப்பதின் நோக்கம அவரின கூட்டத்தார்கள் கொடுத்த பொறுக் கந்தூரியைத் தாக்குதற்கென்றும சொன்னாரென்று கூறினார். எமது நண்பர்கள் எமக்கு மேற்படி செய்திகளைத் தெரிவித்ததற்காக அவர்களுக்கு நன்றிகூறுகின்றோம். நாம் எபபொழுதும் எமது குற்றங்களை யறிய விருப்பமுள்ளவர். எமக்கு விரோதமான பேச்சுகளை யாம கேட்பது எமக்குச் சந்தோஷமான காரியம. நாம மேற்குறிக்கப்பட்ட செய்தியைச் சென்ற பத்திரிகையி லெழுதியிருப்பது மேலான நோக்கத்தோடன்றி பின்னொருவரைத்

தாக்கும கீழ்மையான நோக்கத்தோடன்று. மேலும் நீளமான ஆலோசனையின் பின்னே அதனை யாம் எழுதத் துவங்கினோம். யாம் மனுஷீக தன்மை யுள்ளவர். எமக்குத தவறின்மை சொந்தமானதல்ல. எமது கருத்துகள் தவறிவிடலாம். எமது தவறைக் கண்டவுடன் அதனைத் திருத்திக்கொள்ளுதற்கு எம்மிடம் மனத்தாராளமிருக்கின்றது. ஆகிலும் எமது படசமுள்ள நண்பர்கள் தெரிவித்த மேற்படி செய்திகள் எமது குற்றத்தைக் காட்டவில்லை. எமது கருத்தை யெமது மேற்படி நண்பர்களோடு பேசியவர்கள் சரியாய் விளங்கிக் கொள்ளவில்லையென்றே காட்டுகின்றன. இதற்கதிகமாய் யாம எழுதமுன் ஒரு காரியத்தைச் சொல்லவேண்டியதா யிருக்கின்றது. இத்தேச முஸ்லிம்கள் இருபிரிவுகளாய்க் காணப்படுகின்றார்கள். ஒருபிரிவார் (இவர்களின் தொகை மிகச் சொற்பம்) ஒருவரின் சொல்லைக் கவனிக்கும் பொழுது அவருக்கும் தமக்குமுள்ள நேசத்தை யல்லது பகையைக் கவனியாது அவருக்குரிய எல்லையில அவரை நிறுததி அவரின் சொல்லை நடுநிலைமையோடு ஆலோசிப்பவர்கள். மற்றப் பிரிவார் இதற்கு மாற்றமாய்ச் செய்பவர்கள். முந்தினபிரிவாருக்கே யன்றிப பிந்தின பிரிவாருக்கு உண்மை தோன்றாது. நிற்க.

எமது மேற்படி நண்பர்களோடு பேசியவர்களுககு நாம் சொல்லுகின்ற வுத்தரமாவது:— சென்ற இருபது வருடகாலமாய் நாம் எம் சாகியத்தாரின் பொது நன்மைக்குரிய காரியங்களைக் கவனிக்கிறவரா யிருக்கின்றோம. முஸ்லிம்களின் சில சஙகங்களில் யாம் அஙகத்தவரா யிருந்தோம். சிலவற்றில் எழுத்துக்காரியஸ்தராயும் சில சஙகஙகளில் சபைத்தலைவராயும் இருந்தோம். இரு முஸலிம பத்திரிகைகளின் அதிபராய் இருந்தோம். பல இஙகிலீஷ் பத்திரிகைகளில் இலங்கை முஸ்லிம்களின் பொது விஷயத்தைப்பற்றிப் பலமுறை எழுதும் சிலாக்கியத்தையும் சந்தோஷதையும் பெற்றிருந்தோம். எஙகள் சாதியின் நன்மைக்காயச் சில நூற்களை யெழுதினோம். எங்கள் சாதிவிஷயத்தை (National question) நெருக்கமாய்க் கற்றறிந்திருக்கின்றோம். ஆதலால் எமது சொல் எமது சாகியத்தாரால் சற்றுக் கவனிக்கபபடத தக்கதேயென்று யாம் தற்புகழின்றிச் சொல்லுகின்றோம். யாம் இந்தமட்டுக்காலமும் எம் சாகியத்தவர்களுளிருந்த சீமான்களோடும ஆலிமகளோடும மற்றும் பிரதான மனிதர்களோடும் சாமானிய ஜனங்களோடும் கலந்து பொதுவிஷயத்தில அவரவர்களின் கருத்துகளை யறிந்து அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்திருக் கின்றோம. இவைகளெல்லாம் எம்முடைய மனதில் எஙகள்சாதிவிஷயத்தைக்குறித்துச் சில கருத்துகளை யுண்டாக்கி இருக்கின்றன. அவற்றைச் சொல்லுகிறது எமது கடமை. அவற்றைச் சீர்தூக்கிப் பார்ப்பது எமது சாகியத்தாரின் கடமை. அவர்கள் தங்கள் கடமையைச் செய்யாதிருந்தாலும் யாம் எமது கடமையைச செய்யாதிருக்கக் கூடாது. அவர்கள் அவற்றைக் கவனிப்பதற்குக் காலம் வரவில்லை யென்று எண்ணினாலும் நாம் எமது காலம் மட்டிடப்பட்டதென்பதை யெண்ணுதிருக்கக கூடாது. ஆதலால் நீண்ட ஆலோசனையின் பின்னர் எமதுகருத்துகளை வெளிப்படுத்தத் துணிந்தோ

ம். எமது கருத்து எமது நண்பர்களுட் சிலரின் கருத்தோடு முட்டுமென்பதை யாம் அறிந்தே சென்ற பத்திரிகையில் "எமது கருத்துப் பிறரின் கருத்துக்கு விரோதமாயிருக்கலாம். ஆகிலும் எமது கருத்தின் நியாயத்தை யெம்மாலென்றிய அளவு விளக்கிக் காட்டுவோம்" என்று கூறினோம்.

இத்தீவில் வசிக்கிற சாதியார்களுள் முஸ்லிம்களைத்தவிர மற்றவர்கள் கல்வியை விரும்பினவர்களா யிருக்கின்றார்கள். இங்கிலீசியர், பறங்கியர், சிங்களவர், தமிழர் ஆகிய சாதியார்களைக் கவனியுங்கள். அவர்களுக்குள் ஏராளமான பணமிருந்தும் அவர்கள் கல்வியை யெந்தமட்டுக் கவனித்திருக்கின்றார்கள்? அவர்களுக்குள் பல பத்திரிகைகளும் அச்சியந்திர சாலைகளுமிருக்கின்றனவே? அப்பத்திரிகைகளில் தினந்தோறும் வாரந்தோறும் எத்தனையாயிரம் பிரதிகள் அச்சிடப் படுகின்றன? அவர்களால் வருடந்தோறும் எவ்வளவு புத்தகங்கள் எழுதப்பட்டுப் பரப்பப்படுகின்றன? சிங்களம் இலங்கையில் சிலபாகங்களில் மாத்திரம் பேசப்படுகின்ற பாஷை. வேறொரு தேசத்திலும் அப்பாஷை கிடையாது. அப்படிக் கட்டுப்பாடான பாவனையிலுள்ள வோர் பாஷையாய் சிங்களம் இருந்தும் அதில் எத்தனை பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுகின்றன? எவ்வளவு அச்சியந்திர சாலைகள் கொழும்பிலும் மறுவிடங்களிலு மிருக்கின்றன. எவ்வளவு புத்தகங்கள் வருடந்தோறும் அப்பாஷையில் அச்சிடப்படுகின்றன. சிங்களவர்கள் கல்வியுள்ளவர்களாயும் வாசிப்பவர்களாயும் இராதபட்சத்தில் இந்தக் காரியங்கள் சம்பவிக்குமா? சிங்களவர்கள் முஸ்லிம்களைப் பார்க்கிலும் செல்வ முடையவர்களா யிருந்தும் செல்வத்தைப் போலவே கல்வியையும் உயர்வாய் மதித்திருக்கின்றார்க ளென்பதை இக்காரியங்கள் அத்தாட்சிப் படுத்துகின்றனவல்லவா? மேலும் மேற்படி சாகியத்தாருள் பல பிரயோசனமுள்ள சங்கங்கள் இருக்கின்றன. பொது நிதிகளிருக்கின்றன. உயர்தர உத்தியோகத்தர்க ளிருக்கின்றார்கள். அதிகாரமும் கனமும் இருக்கின்றன. இவைகளெல்லாம் பிரயோசனமான காரியங்களாகவும் பெற்றுக்கொள்ளுதற்கு ஆவசியகமான காரியங்களாகவும் மேற்படி சாதியார்களுக்குத் தோன்றுகின்றனவா யிருக்க, அவற்றின் பலன் எங்கள் முஸ்லிம் சாதியார்களுக்குத் தோன்றாதிருப்பதற்கும் அவற்றை அவர்கள் விரும்பாதிருப்பதற்கும் காரணமென்ன? இக்கேள்வியே எமது மனதை வருத்தப்படுத்துகின்றது. எங்கள் சாதியார் அதிகாரத்தையும் கனத்தையும் பெற்றுக்கொள்ளக் கூடாதிருப்பதென்ன? அவற்றுக்குத் துணைக்கருவியான கல்வியையவர்கள் தேடாதிருப்பதென்ன? எங்கள் சாதியாரை அன்னிய சாதியார்கள் மரியாதை யீனமாய்ப் பாவிப்பதைக் கண்டு அவர்கள் துக்கப்படாமலும், அவ்வாறு அன்னிய சாதியார்கள் காலத்துக்குக் காலம் பாவிப்பது எமமவர்களுள் கல்வியில்லாத படியினாலேயே யென்றுணர்ந்துகொள்ளாமலும் இருப்பதென்ன? ஒரு காலத்தில் சுப்ரீம் கோட்டு நியாயாதிபதியான ஜஸ்டிஸ் கிளறன்ஸ் தமது தீர்ப்பொன்றில் இலங்கை முஸ்லிம்களின் சாட்சி நம்பத்தக்கதல்லவென்று கூறவில்லையா? இன்னுமொரு காலத்தில் கொழும்புடிஸ்திரிக்கு நியாயாதிபதியாயிரு

க்த டயஸதுரை இலங்கை முஸ்லிம்களை நீதாசனத்திலிருந்து நிந்தித்ததற்காய் அவர்கள் தெருப்பள்ளிவாசலில் சபைகூடி யோர் சங்கத்தை ஸ்தாபித்தும் அதனை நடத்திப் பலன் பெறாது விட்டுவிடவில்லையா? வேறொரு காலத்தில் கனம். இராமநாதன் இலங்கைச்சட்ட நிரூபண சங்கத்திலும் றோயல் ஏசியாட்டிக் ஸொஸய்ட்டியிலும் இலங்கைச் சோனகர் தமிழர்களென்று நிந்திக்கவில்லையா? புதிதாய் சிரேஷ்ட நியாயாதிபதியான சார் லெயார்டு அவர்கள் முந்தின முஸ்லிம் அட்வக்கேட்டைத் தமது கோட்டில் தொப்பியை அல்லது சப்பாத்தைக் களட்டும்படி கட்டளைசெய்யவில்லையா? இப்படி காலத்துக்குக் காலம் முஸ்லிம் சாகியத்தாருக்கு மரியாதையீனமான காரியங்கள் சம்பவிப்பதற்குக் காரணம் அவர்கள் கல்வி யில்லாத சாதியாரென்று அன்னியர்களால் மதிக்கப்பட்டிருப்பதே யென்று எம்மவர்களால் விளங்கிக்கொள்ள வியலாதிருக்கில் அவர்களின் மதி எத்தகையானது? அதை யவர்கள் விளங்கி யிருந்தால் தம்முள் கல்வியை விர்த்திசெய்தற்குத் துணியா திருப்பார்களா? தமமுளுள்ள கற்றோரை யேளனமாய்ப பாவிப்பார்களா? அவர்களால் தம் சாதியாரின் நன்மையைக் கருதி நடத்தப்படுகின்ற பத்திரிகைகளை யல்லது அவர்களால் பிரசுரிக்கப்பட்ட புத்தகங்களைப் பெற்று வாசித்துப் பலன் பெறாமல் அவற்றைத் தள்ளுவார்களா? தம சாதியின் பொது நன்மைக்காய் உழைத்து அதற்கு நன்மைசெய்தவர்களுக்கு நன்றி செய்யாது விடுவார்களா? விடார்கள். ஒருபொழுதும் விடார்கள், அவர்கள் தம்சாதியையும் அதன் பொது நன்மையையும் கவனித்தவர்களாயின் அதற்கு நன்மை செய்தவர்களை யலட்சியம் செய்யார்கள். உண்மையாகவோது அவர்கள் தம்மையே யெண்ணுகின்றார்களன்றி தமது சாதியை யெண்ணுகிறார்களில்லை. தம வயிற்றை நிரப்பவும் தமது இச்சைகளை நிறைவேற்றவும் நாடுகின்றார்களன்றி தம் சாகியத்தாரை முன்னே கொண்டுவருதற்கு நாடக்காணோம். இவ்வாறு அவர்களின் குணமிருப்பதற்குக் காரணமென்ன? நாம் அறிந்தமட்டுக்கு அந்தக் காரணம் நாம் சென்ற பத்திரிகையில் கூறியபடி அவர்கள் (அதாவது எம்மவர்களுள் அதிகப்பற்றனவர்கள்) பணமொன்றே பெரிதானதென்றெண்ணியிருப்பதும் சாப்பாட்டுக்குக் கீழ்ப்பட்டிருப்பதுமே. இதனால் அவர்களின் மனம் குருடடைந்து விட்டது. நாம் இப்படிச் சொல்வதற்காய் வாசிப்பவர்கள் குறை நினைக்கக் கூடாது. நோயைக் கண்டாற்றான் பரிகாரஞ் செய்யலாம். ஆதலால் அவர்கள் சிந்திப்பது கடமை.

நாம் சாப்பாட்டின் கெடுதியைக் காட்டுமிடத்தில் கந்தூரியைக் குறிக்க வேண்டியதாய் வந்ததன்றி யாம் கந்தூரி கொடுக்க வேண்டாமென்று எங்கேயாவது செல்லவில்லை. நாம் சென்ற பத்திரிகையில் “மெய்யாகவே கல்வியில்லாத அறிவைக்கொண்டு கல்பை வெளிச்சப்படுத்தாத மனிதர்களின் குர்ஆன் ஓதலிலும், மவ்லூது ஓதலிலும், நஸீஹத்திலும், திக்ரிலும், அமலிலும் யாதொரு பிரயோசனமில்லை, யென்பதையும், அவர்களிவ் விஷயங்களிலே மாற்றப்பட்டிருக்கின்றார்களென்பதையும் நன்றாய் அத்தாட்சிப்படுத்திக் காட்டுவோம்

இவ்விஷயங்களிலெல்லாம் அவர்கள் சீர்திருத்தமடைய வேண்டியவர்களாயிருக்கின்றார்களென்பதைத் தெளிவாய் எடுத்துக்காட்டுவோம்’’ என்று கூறியிருப்பது மெய். அதில் அறிவில்லாமல் மவ்லூது ஓதுகிறதில் பிரயோசனமில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறதன்றி மவ்லூது ஓதவேண்டாமென்று சொல்லப்படவில்லை. அறியாமல் குறுஆன் ஓதுகிறதிலும் மவ்லூது ஓதுகிறதிலும் பலனுண்டென்று சொல்லுகிறவர்கள் குறுஆன் இறக்கப்பட்ட அல்லது மவ்லூது உண்டாக்கப்பட்ட நோக்கத்தையறியாதவர்களாயிருக்கவேண்டும். அல்லது அதையறிந்திருந்தும் பொய்யைச்சொல்லி மனிதர்களை யேமாற்றுகின்றவர்களாயிருக்க வேண்டும்.

இத்தேசத்தில் கொடுக்கப்படுகின்ற கந்தூரியின் பலனை யாலோசிக்குமுன் கந்தூரியின் அல்லது மவ்லூதின் பூர்வீகத்தை யறிய வேண்டியதாயிருக்கின்றது. றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுடைய காலத்தில் சங்கையான மதீனாபள்ளிவாசலில் சில அஸ்ஹாபிகள் நபிஸல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்களின் புகழைக்குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்களென்றும் அதற்காய் அவர்களின் குற்றங்கள் மன்னிக்கப்பட்டனவென்று அல்லாகுத்தஆலா றசூல்சல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்களுக்குத் தெரிவித்தானென்றும் அதுவே மவ்லூதுக்குக் காரணமென்றும் சொல்லப்படுகின்றது. இது பலமுள்ள ஹதீதென்பதை யாம் இன்னும் அறிந்துகொள்ளவில்லை. அது மெய்யாய் நடந்திருப்பினும் அது மவ்லூதுக்குக் காரணமாயிருக்கக் கூடாது. ஏனென்றால் அதுவே மவ்லூதுக்குக் காரணமாயிருந்தால் மவ்லூது சுன்னத்தாக்கப்பட்டு றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் காலத்தில் நடத்தப்பட்டிருக்கும். காரியத்தில் மவ்லூது அஸ்ஹாபிகளுடைய காலத்துக்குப் பிறகே துவங்கப்பட்டது. நபிசல்லல்லாகு அலைகிவசல்லம அவர்களுக்கு 300 வருடங்களுக்குப்பின் னுண்டுபட்டது. அது சுன்னத்துமல்ல, முஸ்தஹப்புமல்ல. அதுவொரு அழகான பிதுஅத்தே (நூதனம்.) அதை முதல்நடத்தியவர் பகுதாதில் அல்லது பஸறாவிலிருந்த சுல்த்தான் முளபறுத்தீன் அவர்களே. அவர் ஓர் இமாமைக்கொண்டு ஓர் சிறு மவ்லூது க்கோவை செய்வித்தாரென்றும, அதுவே முதல் எழுதப்பட்ட மவ்லூதென்றும், அவர் அதற்காய் அந்த இமாமுக்கு ஆயிரக் கணக்கான நாணயங்கள் கொடுத்தனரென்றும், அதுவோதப்பட்டன்று பெருந்தொகையான ஆடு ஒட்டகம் முதலியவற்றையறுத்துத் தாம் வசித்தபட்டணத்திலிருந்த ஜனங்களுக்குத் தீன் கொடுத்தாரென்றும சொல்லப்பட்டிருக்கின்றது. இதை வாசிப்பவர்கள் மவ்லூது ஓர்பிதுஅத்து என்று சொல்லப்பட்டதால் அது பிரயோசனமற்றதென்றும், சுல்த்தான் சாப்பாடு கொடுத்ததால் தாங்களும் சாப்பாட்டையதிகப்படுத்துகிறது நல்லதென்றும் எண்ணிவிடப்படாது. மவ்லூது வோர் நூதனமான செய்கையாயிருந்தாலும் அதை பிரயோசனத்தோடு நடத்துகிறது தகுதியான காரியமே.

இத்தேசத்தில் கொடுக்கப்படுகின்ற கந்தூரியிலுள்ள மவ்லூதையும் சாப்பாட்டையும் பிரித்துக் கவனிப்போம். மவ்லூது

அறபுப்பாஷையி லோதப்படுகின்றது. மவுலூதுக் களரிக்குப் போகின்றவர்க ளெல்லோருக்கும் மவுலூது ஓதுகிறது கேட்கின்றதா? அதைக் கேட்டவர்களுக்கு அது விளங்குகின்றதா? அதற்குச் செவிகொடுத்து அதனைக் கேளாதவர்களும் அதைக் கேட்டும் அதனை விளங்கிக்கொள்ளாதவர்களும் மவுலூதின் பலனைப் பெற்றுக்கொள்ளாதவர்களே. "மவுலூது" என்றதற் கருத்தம் "பிறப்பு" என்றதே. நாங்கள் ஓதுகின்ற மவுலூதிலுள்ளது நபிஸல்லல்லாகு அலைகிவசல்லம் அவாகளின் சிவியசரித்திரமே. ஆகவே நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் பிறந்த நாளில் நாங்கள் அவர்களின் சரித்திரத்தை யறிந்து அவர்களைத் துதிப்பதே மவுலூது. அதுவோர் ஜன்மதினக் கொண்டாட்டமே. அக்கொண்டாட்டம் மற்றும் கொண்டாட்டங்களை விட்டும் ஒரு காரியத்தில் வித்தியாசப்படுகிறது. அந்தக்காரியம் தேவபத்தியே. றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் ஜன்மதினக் கொண்டாட்டம் தேவபத்தியோடு அதாவது தேவபத்தி யுண்டாகக் கூடியதன்மையில் நடத்தப்படல் வேண்டும். இத்தேசத்தில் நடத்தப்படுகின்ற கந்தூரியால் மனிதர்களுக்குப் பத்தியுண்டாகிறதற்குஎன்ன வழியிருக்கின்றது? றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களை யுவந்ததற்காய்த் தாங்கள் கந்தூரி கொடுக்கின்றதாகச் சிலர் சொல்லுகின்றார்கள். நபியை யறியாதவர்களுக்கு நபிமீதில் உவப்புண்டாகிறது எங்ஙனம்? இத்தேசத்தில் வருடாந்தம் கந்தூரி கொடுப்பவர்களுள்ளும் அவர்களின் கந்தூரிகளுக்கு வருடாந்தம்போய் மவுலூது கேட்கின்ற ஆயிரக் கணக்கான ஜனங்களுள்ளும் எத்தனை பெயர்கள் நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் சரித்திரத்தை யறிந்தவர்களென்று கேட்கின்றோம். மெய்யாகவே நபியின் சரித்திரத்தை யறியாதவர்கள் நபியை அறிந்தவர்களல்ல. நபியை யறியாதவர்கள் நபியை யுவந்ததாய்ச் சொல்வது பொய். நபியை யறியாதவர்கள் கந்தூரி கொடுப்பது வழக்கத்தாலன்றி நபியை யுவந்ததாலல்ல. அறிவுக்குப் பின்னே உவப்பு வருமென்பதற்கு வோர் உதாரணஞ் சொல்கின்றோம். மாட்சிமை தங்கிய சுல்த்தான் அப்துல் ஹமீது கான் அவர்களின் ஜன்மதினமாகிய ஆவணி மாதம் 31உ துருக்கி ராச்சியம் முழுதும் கொண்டாட்டம் நடத்தபபடுகின்றது. அக்கொண்டாட்டத்தின் காரணம் சுல்த்தான் அவர்கள் யூகமும் நீதியும் பட்சமுமுள்ள அரசரென்று அறியப்பட்டிருப்பதே. அவர்கள் மடமையும் அநீதியும் நிஷ்டூரமுமுள்ள அரசர் என்று அறியப்பட்டிருந்தால் அக்கொண்டாட்டம் ஊக்கத்தோடு நடத்தப்பட மாட்டாது. அன்று சுல்த்தானுடைய மந்திரிமார்களும் பெரு முத்தியோகத்தர்களும் அன்னிய தேச தானாதிபதிகளும் மாளிகைக்குச் சென்று சுல்த்தான் அவர்களுக்குச் சோபனங்கூறுகின்றார்கள். அன்னியதேச அரசர்கள் சுல்த்தான் அவர்களுக்கு சோபனஞ்சொல்லித் தந்தி யனுப்புகின்றார்கள். சுல்த்தானுடைய விராச்சியத்திலுள்ள புதினப் பத்திரிகைகள் சுல்த்தானுக்கு மங்கலஞ்சொல்லி நீண்ட செய்திகளைப் பிரசுரிக்கின்றன. அவற்றில் சுல்த்தானின் யூகமும், நீதியும், பிரஜைகள் மீதுள்ள பட்சமும், குடிஜனங்களின் நன்

மைக்காய் அவர்கள் செய்த காரியங்களும், அவர்களின் இராச்சியத்தில் உண்டுபட்டிருக்கிற திருத்தங்களும் காட்டப்படுகின்றன. இவற்றை சுல்த்தானின் பிரஜைகள் வாசித்தவுடன் அவர்கள் தங்களரசர் எப்படிப்பட்டவரென்று அறிந்து கொள்ளுகின்றார்கள். அறிந்தவுடன் அவர்களின் இராசபக்தி அதிகப்படுகின்றது. அரசரும் பிரஜைகளும் பட்சம் என்னும் பாசத்தால் கட்டப்படுகின்றார்கள். இவ்வித வோர் நன்மையை யுண்டாக்கவே மேற்படி கொண்டாட்டம் நடத்தப்படுகின்றது. சுல்த்தானின் நன்மைகளை யறிந்த அவர்களின் பிரஜைகளுக்கு இராசபக்தி யுண்டாகிறது போல் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் நன்மைகளையறிந்த முஸ்லிம்களுக்கு தேவபத்தி யுண்டாகும். றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களை யொருவர் அறிந்திருந்தால் அவர்களை யுவப்பார். அவர்களை யுவந்திருந்தால் அவர்களின் நாயனை யுவப்பதோடு அவர்கள் கொண்டுவந்த மார்க்கத்தைக் கைக்கொண்டு அதன்படி நடப்பார். இது சத்தியம். நபிஸல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் கொண்டுவந்த வேதத்தின் பிரதான சட்டங்களை முறித்து நடப்பவர்கள் கந்தூரி கொடுப்பது நபியின் மீதுள்ள உவப்பினா லென்றால் அதை யொத்துக் கொள்ளலாமா? வருடந்தோறும கந்தூரிகொடுத்து மனிதர்களுக்கு ஒருதரம அன்னங் கொடுப்பவர்கள் எங்கள் வேதத்தில் கற்பிக்கப்பட்ட மிக்க பிரதானமான தருமத்தைக் கொடுப்பவர்களோ வென்ற கேள்வியைப் பின்னால் கவனிப்போம். இப்பொழுது இத்தமட்டில் சொல்லுகின்றோம். இத்தேசத்தில நடத்தப்படுகின்ற மவுலூது பலன் கொடுக்க வேண்டுமாயின் அதன் ஒழுங்கு மாற்றப்படல் வேண்டும். சாப்பாட்டைப் பிரதானமாய்க் காணாமல் ஓதப்படுகின்ற மவுலூதைப் பிரதானமாய்க் காணவேண்டும். மவுலூதை இத்தேச மனிதர்கள் விளங்கிக்கொள்ளும்பொருட்டு அவர்கள் அறிந்த பாஷையாகிய தமிழில் ஓதவேண்டும். மனிதர்கள் தங்களுக்கு வசதியான நாட்களில் மவுலூது நடத்தாமல் நபி பிறந்த தினத்திலேயே அதனை நடத்தவேண்டும். அன்று எல்லோரும் அல்லது பலர் மவுலூது நடத்தினால் ஜனங்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாதே யென்று எண்ணப்படாது. ஒரு வீட்டில் நபியின் மவுலூது ஓதப்பட்டால் அல்லது அவர்களின் ஜனனத்தைக் குறித்துப் பிரசங்கிக்கப்பட்டால் அதனைக் கேட்டுக்கொள்ளக் கூடிய தொகையினரான மனிதர்களே யதற் கழைக்கப்படல் வேண்டும். நபியின் ஜன்மதினத்தில் ஒரு முஸ்லிம் தம்வீட்டுக்குத் தமது சுற்றத்தவர்களையும்மித்திரர்களையும் அழைத்து அவர்களுக்கும் தமக்கும் தமது மக்களுக்கும் அவர்களுக்கு விளங்கக்கூடிய பாஷையில் நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் சீவிய சரித்திரத்தை முற்றாய் அல்லது அதனோர்பாகத்தை வாசித்துக் காட்டச்செய்து, அல்லது அவர்களின் ஜனனத்தால் மானிடருக்குண்டான நன்மைகளைக் குறித்துப் பிரசங்கிக்கச்செய்து, அச்சரித்திரத்தை அல்லது பிரசங்கத்தைக் கேட்ட மனிதர்கள், நபியையும் அவர்கள் மனிதசாதியாருக்குச் செய்த நன்மைகளையும் நினைவு கூறி அவர்களை வாழ்த்திய பின்னர் ஏதேனும் பதார்த்தங்களை யருந்தி

விட்டுத் தங்கள் மனைகளுக்கு ம கிழ்ச்சியோடு திரும்பி நருலையும அவர்களின் மார்க்கத்தையும் உ வந்திருக்கச் செய்வதே பலனுள் ள மவுலூது. இவ்விதமான பல ன் இத்தேசத்தில் ஓதப்படுகிற மவுலூதா லுண்டாகின்றதா? இ ல்லையென்பது பிரத்தியச்சம். ப லன் கொடுக்கத்தக்க மவுலூதை நடத்த நாடுகின்ற எமது நண்பர் கள் நாம் மேலே சொன்னவாறு செய்வார்களாக.

இத்தேசத்தில் கொடுக்கப்படு கிற கந்தூரியிலுள்ள சாப்பாட் டாலாகும் பலனையும் மற்றும் விஷயங்களையும் அடுத்த சஞ்சி கையில் கவனிப்போம்.

# சோபனம்.

இம்மாதம் 24உ பின்னேரம் திங்கட்கிழமை யிரவு விவாக மு டித்த எமது பட்சமுள்ள நண்பர் களான கொழும்பு கனம் அ.லெ. ம. ஆலிம் அப்துல் மஜீது அவர் களுக்கும், கண்டி கனம் எஸ். ஏ. ஹன்னன் அவர்களுக்கும் சோப னங் கூறுகின்றோம். கனம். அப் துல் மஜீது அவர்கள் கனதனவா னும், சோனகர் ஐக்கிய சங்கப் பொக்கிஷக்காரரும் பிரபல வர் த்தகருமே. கனம். ஹன்னன் அ வர்கள் கனவானும் கண்டியில் முஸ்லிம் விவாக றஜிஸ்திரா ரி ருப்பவருமே. இருவரும் எமது "பாதுகாவலனின்" துணையாள ர்கள். இருவரும் நீண்டகாலம் சு கத்தோடும் செல்வத்தோடும் சந் தோஷத்தோடும் வாழுதற்கு அ ல்லாகுத்தஆலா கிருபை செய் வாராக.